# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 44.

### வக்கீல் தொழில் அனுபவங்கள்.

இந்தியாவுக்கு நான் வந்து சேர்ந்த பின்னர் இந்தியாவில் நான் மேற்கொண்ட என் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதற்கு முன்னர், தென்னாப்பிரிக்காவில் அடைந்த சில அனுபவங்களைப் பற்றிக் கூறவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனின் நான் அவைகளைப் பற்றி முன்னமே கூறாமல் விட்டுவிட்டேன்.

சில வக்கீல் நண்பர்கள், நான் தென்னாப்பிரிக்காவில் வக்கீல் தொழில் நடத்தியபோது பெற்ற சில அனுபவங்களைப்பற்றி கூறும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அனுபவங்களெல்லாவற்றையும் விவரமாகக் கூறுவதென்றால் அதுவே சில புஸ்தகங்களாக முடியும். அதனால் நான் கொண்ட நோக்கமும் நிறைவேறாமற் போய்விடும். ஆனால் உண்மையைப் பழகி வருவதில் சம்பந்தப்பட்டுள்ள சில விஷயங்களைப் பற்றியேனும் கூறாமற் போவது நியாயமுறை தவறியதாகும்.

எனக்கு ஞாபகம் இருக்கிற வரையில் நான் முன்னமே கூறியதேபோல், என் தொழிலில் நான் பொய் பேசியதில்லை. மேலும் நான் வக்கீல் வேலை செய்ததும் பெரும் பான்மையும் பொது ஜன நன்மைக் குறித்ததானதாகவே இருந்தது. அன்றியும், அதற்கும் அதிகப் பணத்தை எதிர்பாராமல் என் அவசியமான செலவுகளுக்கு வேண்டிய பணத்தை மட்டும் எதிர்பார்த்தேன். சிற்சில சமயங்களில் அதையும் நானே சொந்தத்தில் சமாளித்துக் கொண்டதுமுண்டு. இவ்வளவு மட்டும் கூறுவதாலேயே என் வக்கீல் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் கூறவேண்டிய யாவற்றையும் கூறிவிட்டதாக எண்ணியிருந்தேன், ஆனால் என் நண்பர்கள் இன்னும் விவரமாகக் கூற வேண்டுமென்று விரும்புகின்றனர். நான் இவ்வாறு விவரமாகக் கூறுவதால் நான் உண்மையிலிருந்து விலக மறுத்திருக்கும் சில சந்தர்ப்பங்கள் வெளியாகுமாயின் அதனால் வக்கீல் தொழிலுக்கே சிறிது நன்மையை ஏற்படுத்திக் கொள்ளலாமென்பது அவர்களுடைய அபிப்பிராயமென்று தோன்றுகிறது.

நான் மாணவனாக இருந்தபோது வக்கீல் தொழில் பொய்யனுடைய தொழில் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் அந்தஸ்தையோ, செல்வத்தையோ பொய் சொல்லிச் சம்பாதிப்பதென்னும் கொள்கைக்கு முற்றும் முரணானவனாதலின் மேற்கூறிய வாக்கு என்னிடம் பலிக்கவில்லை.

### எனது சோதனைகாலம்.

தென்னாப்பிரிக்காவில் என் கொள்கைகளுக்குச் சோதனைகள் பல ஏற்பட்டன. என் எதிர்க்கட்சி வக்கீல்கள் தங்கள் கட்சிக்காரர்களுக்குப் பொய்களைச் சொல்லிக் கொடுக்கிறார்களென்பதையும் நானும் என் கட்சிக்காரர்களுக்குப் பொய் சொல்லிக் கொடுத்தால் உண்மையில் என்கட்சிதான் ஜெயிக்குமென்பதையும் நான் அறிந்திருந்தேன். ஆனால் நான் அத்தகைய சோதனை காலங்களில் சிறிதும் சலிப்புறாமல் அவைகளை எதிர்த்தே நின்றிருக்கிறேன். ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தான், வழக்கில் என் பக்கம் வெற்றி கிடைத்த பின்னர் என் கட்சிக்காரன் என்னையும் ஏமாற்றி விட்டானோ என்னும் சந்தேகம் தோன்றியது. உண்மையில் என் கட்சிக்காரர் நியாயமாக நடந்துகொண்டிருந்தால் மட்டுமே என் பக்கம் வெற்றிகிடைக்க வேண்டுமென்பது என் அந்தரங்க உத்தேசம். வழக்குகளை ஏற்றுக் கொள்ளும்போதும், கட்சிக்காரர்கள் எனக்குக் கொடுக்கவேண்டிய கட்டணத்...

...ஏற்படுத்துவது வழக்கமில்லை. வெற்றி கிடைத்தாலும், தோல்வியே யடைந்தாலும் நான் எதிர்பார்த்த கட்டணத்தை அவர்கள் கொடுத்துவிடவேண்டியதுதான்.

புதுக் கட்சிக்காரர்களை ஏற்றுக்கொள்ளும்போதே அவர்களிடம் நான் பொய் வழக்குகளை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், சாக்ஷிகளுக்குப் பொய்களைச் சொல்லிக்கொடுக்க முடியாதென்றும் எச்சரித்து விடுவது வழக்கம். இதனால் பொய் வழக்குகள் என் சமீபத்திலும் அணுகுவதில்லை என்னும் புகழைச் சம்பாதித்துக் கொண்டேன். என் கட்சிக்காரர்கள் பலர் உண்மையான வழக்குகளை மட்டும் என்னிடம் ஒப்புவித்துவிட்டு இதர வகைகளை வேறு வக்கீல் மாரிடம் கொடுப்பது வழக்கம்.

### ஒரு சிக்கலான வழக்கு.

அப்போது ஒரு சிக்கலான வழக்கை நான் எடுத்துக் கொள்ள வேண்டியதாக நேரிட்டது. அவ்வழக்கை எனக்கு அதிகம் வேண்டிய ஒரு கட்சிக்காரர் என்னிடம் கொண்டுவந்தார். அது மிகவும் சிக்கலான கணக்குகளுடன் சம்பந்தப் பட்டிருந்தபடியால் நீண்ட நாள் வரை விசாரணை நடக்க வேண்டியிருந்தது. அது பல நீதி ஸ்தலங்களிலும் விசாரிக்கப்பட்டு இறுதியில் சில அரசாங்க அனுமதி பெற்ற கணக்குப் பரிசோதகர்களின் பஞ்சாயத்துக்கு அவ்வழக்கின் உண்மையைக் கண்டுபிடிக்கும்படி ஒப்புவித்துவிட்டார்கள். அதன் பயனாக ஏற்பட்ட முடிவு என் கட்சிக்காரனுக்குச் சௌகரியத்தைத் தரக்கூடியதாகத் தானிருந்தது. ஆனால் கணக்குப் பரிசோதகர்கள் வரவில் சேர்க்கவேண்டிய ஒரு தொகையைச் செலவில் சேர்த்துவிட்டதால் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சியினர் அவர்களுடைய முடிவை வேறு வகையால் எதிர்த்தார்களே யன்றி இவ்விஷயம் அவர்களுக்குப் புலனாகவில்லை. என் கட்சிக்காரனுக்கு நான் உதவி வக்கீலாக இருந்தேன். பிரதம வக்கீல் வேறொருவர் இருந்தார். பிரதம வக்கீலுக்கு இத்தவறுதல் விஷயமாகத் தெரிந்தபோதிலும் அதை நம் கட்சிக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை யென்று நினைத்துவிட்டார். மேலும் அவர் எந்த வக்கீலும் தம் கட்சிக்காரனுடைய நன்மைக்கு விரோதமாக இருந்து தவறிப்போனவைகளை ஒப்புக் கொள்ளவேண்டிய அவசியமில்லை யென்றும் அபிப்பிராயப்பட்டார். நான் அக்குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கூறினேன்.

அதற்குப் பிரதம வக்கீல், "அவ்வழக்கில் கோர்ட்டார் பஞ்சாயத்தின் முடிவை மாற்றி விடுவார்களென்று நினைக்க இடமிருக்கிறது. ஆதலின் நமது கட்சிக்காரர் வழக்கு தோல்வியுறும்படி எந்த அறிவுள்ள வக்கீலும் நடந்துகொள்ளமுடியாது. ஆதலின் அத்தகைய அபாயத்தை நான் மேற்கொள்ளமாட்டேன். மறுபடியும் அவ்வழக்கு விசாரிக்கப்படுமாயின், நமது கட்சிக்காரருக்கு அதிகச் செலவு ஏற்படுவதுடன் வழக்கும் எப்படி முடியுமோ?" என்று கூறினார்.

### எனது வாக்கு வாதம்.

எனக்கும் பிரதம வக்கீலுக்கும் இத்தகைய வாக்குவாதம் நடந்த போது எங்களுடைய கட்சிக் காரரும் இருந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்போது நான், "நாங்களும் நமது கட்சிக்காரரும் இந்த அபாய நிலைமையை ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான் நியாயம். நாங்கள் இக்குற்றத்தை ஒப்புக்கொள்ளாததாலேயே கோர்ட்டாரும் அந்தத் தவறுதலான முடிவை ஏற்றுக்கொள்வார்களென்பதற்கு ஆதார...

...வாறு குற்றத்தை நாம் ஒப்புக்கொள்வதால் நமது கட்சிக்காரருக்கு நஷ்டம் ஏற்படுமாயில் அதனாலென்ன தீங்கு விளையப்போகிறது?" என்றுகூறினேன்.

அதற்குப் பிரதம வக்கீல், "ஆனால் நாம் என் அத்தவறுதலை ஒப்புக் கொள்ளவேண்டும்?" என்றார். நான் "கோர்ட்டாராவது, எதிர்க்கட்சியினராவது இந்தத் தவறுதலைக்கண்டுபிடித்து விடமாட்டார்களென்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டேன்.

அப்போது பிரதம வக்கீல் இறுதியாக, "உங்களுடைய நிபந்தனையின் படி இந்த வழக்கை விவாதிக்க என்னால் முடியாது. வேண்டுமானால் நீங்களே விவாதித்துக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டார். அதற்கு நான் மிகப் பணிவுடன், "தாங்கள் விவாதிக்காமல் விட்டுவிட்டால், நமது கட்சிக்காரர் ஒப்புவாராயின் அதை விவாதிக்க நான் சித்தமாக இருக்கின்றேன். மேற்படி தவறுதலை ஒப்புக் கொள்ளாவிட்டால் இவ்வழக்கில் நான் ஈடுபட முடியாது" என்று விடையளித்தேன்.

### கட்சிக்காரரின் நம்பிக்கை.

இவ்வாறு கூறிக்கொண்டே நான் என் கட்சிக்காரரின் முகத்தை உற்று நோக்கினேன். அவர் சிறிது அச்சமுடையவராகத் தோன்றிய போதிலும், ஆதிமுதல் நான் அவ்வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தபடியாலும், அவருக்கு என்னிடம் அதிக நம்பிக்கை இருந்தபடியாலும் அவர், "கணக்குப் பரிசோதகர்களின் தவறுதலையும் ஒப்புக்கொண்டு தாங்களே வழக்கை நடத்துங்கள். நாம் தோல்வியடைய வேண்டுமென்று இருந்தால் நமக்குத் தோல்வி ஏற்படும். ஈசுவரன் உண்மையை ஆதரிப்பார்" என்று கூறினார்.

எனக்குத் திருப்தி ஏற்பட்டது. நானும் இதைத்தான் என் கட்சிக்காரரிடமிருந்து எதிர் பார்த்தேன். பிரதம வக்கீல் மறுபடியும் எனக்கு எச்சரிக்கை செய்ததுடன் என் பிடிவாதத்துக்காக என்னிடம் அனுதாபமும் காட்டினார். ஆனால் அதே சமயத்தில் என்னைப் பாராட்டாமலிருக்கவும் அவரால் முடியவில்லை.

கோர்ட்டில் இவ்வழக்கு சம்பந்தமாக என்ன நடந்தது என்பதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறுவேன்.

## பாகம் 4. அத்தியாயம் 45.

### எனது வெற்றி.

இந்த சிக்கலான வழக்கு சம்பந்தமாக நான் கூறியதில் உண்மை உண்டு என்பது நிச்சயமாயினும் நான் மட்டும் தனியே அவ்வழக்கில் தக்கபடி வாதிப்பேனா என்பதுதான் எனக்கு சந்தேகமாக இருந்தது. இத்தகைய கஷ்டமான வழக்கில், சுப்ரீம் கோர்ட்டில் வாதிப்பது மிகச் சிரமமான காரியமென்றே எனக்குத் தோன்றியதால் நான் அச்சத்துடனும் நடுக்கத்துடனும் தான் கோர்ட்டுக்குச் சென்றேன். கணக்குகளைப் பரிசோதித்ததில் ஏற்பட்ட தவறை நான் எடுத்துக்காட்டியதும் நீதிபதிகளில் ஒருவர், "இவ்வாறு சிக்கலான விஷயங்களை யெல்லாம் கூர்ந்து கவனிப்பது சிரமமான வழக்க மல்லவா?" என்று கேட்டார். இச்சொல்லைக் கேட்டதும் என்மனம் புண்பட்டது. கஷ்டமொன்றுமில்லாதபோது கஷ்டமான வேலை என்று கூறுவது பொறுக்க முடியாததல்லவா? ஆதலின் வழக்கின் ஆரம்பத்திலேயே இப்படிப் பட்ட முன் அபிப்பிராயத்தை நீதிபதி கொள்வதால் வழக்கில் வெற்றி ஏற்படுமா என்னும் சந்தேகம் எனக்கு உதித்தது. எனினும் நான் தீரயோசித்து, "என்னுடைய விரதத்தைப் பூராவாகவும் கேட்காமலே கஷ்டமான வேலை என்று தாங்கள் சந்தேகப்படுவதைக் காண எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்று பதிலளித்தேன்.

அதற்கு நீதிபதி, "நான் குற்றம் சாட்டவில்லையே. யோசனைதானே கூறினேன்" என்று விடை பகர்ந்தார்.

"தாங்கள் இச்சமயத்தில் யோசனை கூறியதும் எனக்குக் குற்றம் சாட்டுவது போலத்தான் தோன்றியது. தாங்கள் என் விவாதம் பூராவும் கேட்டுவிட்டு, பின்னர் அவசியம் ஏற்பட்டால் என் மீது குற்றம் சாட்டலாம்" என்று நான் கேட்டுக்கொண்டேன்.

அப்போது நீதிபதி, "உம்முடைய விவாதத்தின் மத்தியில் குறுக்கிட்டதற்காக நான் வருந்துகிறேன். இந்த தவறைப்பற்றிய வியாக்யானம் விவரமாகக் கூறுங்கள்" என்றார்.

### எனக்கேற்பட்ட உற்சாகம்.

நான் வியாக்கியானம் செய்வதற்கு வேண்டிய பல ஆதாரங்களை வைத்துக் கொண்டிருந்தேன். நீதிபதியும் இவ் விவாதத்தைக் கேட்க முன் வந்ததற்காக நன்றி செலுத்திவிட்டு, விவாதம் செய்ய ஆரம்பித்தது முதலே கோர்ட்டில் அனைவரும் என் சொல்லிலேயே கவனம் செலுத்தலாயினர். எனக்கும் அதிக உற்சாகம் ஏற்பட்டுவிட்டது. ஆதலின் விவரமாக விவாதிக்க ஆரம்பித்தேன். நீதிபதிகளும் என் விவாதத்தைச் சாவதானமாகக் கேட்டனர். நான் இந்தத் தவறு கவனக்குறைவால் ஏற்பட்டதென்று நீதிபதிகள் உணரும்படியும் செய்தேன். எனவே அவர்கள் பரிசோதகர்கள் கூறிய தீர்ப்பை மாற்றவிரும்பவில்லை. எதிர்க்கட்சி வக்கீல், மேற்படி தவறை நீதிபதிகள் ஒப்புக்கொண்டு விட்டதால் தாமொன்றும் அதிகம் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை யென்று நம்பியிருந்தார். ஆனால் நீதிபதிகளோ மேற்படி தவறுகளை விரைவில் திருத்திவிடலாமென்றும், ஆதலின் எதிர்க்கட்சி வக்கீல் தன் வாதத்தைக் கூற வேண்டுமென்றும் கூறினார்கள். கணக்குப் பரிசோதகர்களின் தீர்ப்பை எதிர்க்க எதிர்க் கட்சி வக்கீல் அதிகச் சிரமப்பட்டார். ஆனால் ஆரம்பத்தில் சிறிது சந்தேகத்துடன் இருந்த நீதிபதி அப்பால் எனக்கு சாதகமாகத் திரும்பிவிட்டார்.

"காந்தி மேற்படி தவறை ஒப்புக் கொள்ளாவிட்டால் நீர் என்ன செய்திருப்பீர்?" என்று அந்த நீதிபதி எதிர்க் கட்சி வக்கீலைக் கேட்டார். மேலும் அந்த நீதிபதி, இவ்வழக்கில் நியமிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்களைக் காட்டிலும் மிக்க கண்ணியமானவர்கள் அகப்படுவது கஷ்டமென்றும், எதிர்க்கட்சி வக்கீல் இச்சிறு தவறைத் தவிர வேறு ஒன்றையும் எடுத்துக் காட்டாவிட்டால் வழக்கை முதலிலிருந்து ஆரம்பிக்கும்படி கூற நேரிடுமென்றும், ஆனால் இச்சிறு குற்றத்திற்காகப் புனர் விசாரணை செய்ய முடியாதென்றும் கூறினார்.

எனவே, எதிர்க்கட்சிவக்கீலின் மறுப்பை நீதிபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. கோர்ட்டார் பரிசோதகர்களின் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்களா அல்லது சிறு தவறையும் சரிப்படுத்திவிடும்படி பரிசோதகர்களுக்குக் கூறினார்களா என்பது எனக்கு ஞாபகமில்லை.

எனக்கு சந்தோஷம் அதிகரித்துவிட்டது. எனது கட்சிக்காரரும், பிரதம வக்கீலும்கூட ஆனந்தமடைந்தார்கள். எனவே பொய்யைச் சம்பந்தப் படுத்தாமல் வக்கீலாகவும் இருக்கலாம் என்னும் என் எண்ணம் உறுதிப்பட்டது. ஆனால் ஒரு தொழிலில் எவ்வளவுதான் உண்மையாக நடந்து கொண்டபோதிலும் அதிலுள்ள முக்கிய குற்றங்கள் விரைவில் ஒழியாவென்பது நிச்சயம்.

### திருத்தம்.

சென்ற 26-3-28-ல் வெளியான மித்திரனின் 7-ம் பக்கத்திலுள்ள "மதிப்புரைகள்" கலத்தில் உவு ??னைர்க் தூர்மீ பர்றியதில் ஆசிரியர் க. மா. தேவசகாயநாடார் என்றிருப்பதை கா. மீ. தேவசகாயநாடார் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மகாஜன 12—வது மகாநாடு.

### அருப்புக்கோட்டையில் கூட்டம்.

சென்றவாண்டில் கும்பகோணத்தில் கூடிய 11—வது மகாநாட்டின் போது அருப்புக்கோட்டைக்கு 12—வது மகாநாட்டை அழைத்ததற்கிணங்க உரிய காலத்தில் நடத்திவைக்க வேண்டி மதுரை நாடார் மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்களும் மாஜி காரியதரிசி ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்களும் 7-4-28ல் இவ்விடம் விஜயஞ்செய்திருந்தார்கள்.

இவர்களை நல்வரவேற்று அருப்புக்கோட்டையிலுள்ள குலாபிமானத் தலைவர்களும், வாலிபர்களும், மாணவர்களும் கூடி ஹைஸ்கூலில் மகா-ள-ள-ஸ்ரீ ச. வள்ளிநாயக நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டிவைத்தார்கள். பிரபலஸ்தர் பலர் விஜயஞ் செய்திருந்தனர்.

12-வது மகாநாட்டை விபவ வருஷம் ஆனிமாதத்தில் அவசியம் நடத்திவைக்க வேண்டுமென்றும், அம்மாதத்தில்தான் போதுமான சௌகரியங்களிருக்கின்றன வென்றும் அருப்புக்கோட்டைக்கும் விருதுநகருக்கும் ரயில் போடுவதாக ஏற்பாடாகி யிருப்பதற்கிணங்க அதை எதிர்பார்த்தாலும் குறைந்த பக்ஷம் வருடம் ஒன்றுவது செல்லுமாகையால் அதை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை யென்றும், நல்ல முறையிலும் சிக்கனமாகவும் புதிய எழுச்சியுடனும் நடத்திவைக்க வேண்டுமென்றும் ஸ்ரீமான்கள் அ. பெ. இரத்தினவேல் நாடார், க. அருணசலம், பெ. ஏனுதி நாடார், சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர், கு. ஆ. முத்துநாடார், மதுரை ஆ. கு. அ. இ. இளையபெருமாள்நாடார், தூத்துக்குடி சி. ச. மலையரசநாடார், ப. உ. ஆ. சிதம்பரநாடார், மா. கு. தங்கவேல் நாடார் ஆகியவர்கள் பேசினர்கள். அதுசமயம், "நாடார் மகாஜன சங்கம் 12-வது கான்பரன்ஸை விபவ ௵ ஆனி ௴ கடைசிவாரத்தில் அருப்புக்கோட்டையில் மேன்மைதங்கிய அருப்புக்கோட்டை உறவின் முறையார் அவர்கள் ஒத்தாசையைக் கொண்டு நடத்த வேணுமாயும் மகாநாட்டை நடத்திவைக்க கமிட்டி நியமிக்க விபவ ௵ சித்திரை ௴ 3 ௳ (15-4-28) ஓர் பொதுக்கூட்டம் கூட்டிவைக்க வேணுமாயும் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை கனம் அ. பெ. இரத்தினவேல் நாடார் அவர்கள் பிரேரிக்க கனம். சொ. ஆ. சொக்கலிங்கபாண்டிய நாடார் அவர்கள் ஆமோதிக்க கனம். கு. ஆ. முத்துநாடார் அவர்கள் ஆதரிக்க ஏகமனதுடன் சபையில் நிறைவேறியது. வந்தனோபசாரத்திற்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

---

## லாயட் ஜியார்ஜ் பிரசாரம்.

### பால்வினை கண்டித்தல்.

நாவலூனல் விபரல் கிளப்பில் பிரசங்கஞ் செய்கையில் ஸ்ரீ. லாயட் ஜியார்ஜ் பிரிட்டிஷை மிகவும் கண்டித்துப் பேசினர். மேலும் ஸ்ரீ. லாயட் ஜியார்ஜ் பார்லிமெண்ட் சபையில் கொண்டு வந்த ஸ்திரீகள் ஓட்டுரிமை தீர்மானத்தினுல் பிரிட்டிஷ் அரசாங்கமே ஸ்திரீகள் கைக்கு மாறிவிட்டதென்றும், ஆனுல் இப்பொழுதிருக்கும் அரசாங்கத்தினரைவிட ஸ்திரீகள் கையிலிருப்பதே மேலென்றும் சொன்னர். "அரசாங்கம் ஒரு பால்டுவின் கையிலிருப்பதைவிட 80 லட்சம் ஸ்திரீகள் கையிலிருக்க எனக்குச் சம்மதம்" என்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

ரப்பர் வியாபாரத்திலிருந்த நிபந்தனைகளை எடுத்து விட்டதைக் குறித்துப் பேசுகையில், அவ்விதச் செய்கையினுல் அரசாங்கத்தினர் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் எவ்வளவு தீங்குகளிழைக்கலாமோ அவ்வளவு தீங்குகளிழைத்திருக்கின்றன ரென்றும் கூறினர்.

---

காலஞ் சென்ற திருவாளர்,

## பெ. திருமேனிநாத நாடார் அவர்கள்

### அனுதாபக் கடிதங்கள்.

நம்முடைய மித்திரன் மூலம் அன்பர் திருமேனி நாதர் அவர்களின் அகால மரணம் கண்டு திடுக்கிட்டு மதிமயங்கிப்போனேம். திருமேனியின் திரு உடல் அனல்வாய்ப்பட்டு வெந்து சாம்பலாயினவோ! ஐயோ! நெஞ்சம் துடிக்கிறதே !! மனம் பதறுகிறதே !!! வளர்த்தவர்களும், உடன் பிறவிகளும் பிறரும் எங்ஙனம் துடித்தனரோ! திருமேனியின் அந்திய காலத்தில் ஒரு நிமிஷமேனும் அருகிலிருந்து ஒரு வார்த்தையேனும் பேசும் பாக்கியம் பெற்றேனில்லை. திருமணம் விஷயமாய்ப் பெரியோர்கள் சொல்லை அவர் ஏற்காததைக்கொண்டு பன்முறை பலவகை மொழிகள் நேரில் சொல்லியுள்ளேன். அவைகள் இன்று என்பால் அம்புகள் போல் தைக்கின்றன. என் செய்வோம்! தேசமும் சமுகமும் ஒரு இளம் சிங்கத்தை இழந்தது. உண்மை அன்பரை இழந்தோம். திருமேனி தொண்டை நினைக்கும்தோறும் மனம் பெரிதும் உபாதையடைகிறது. இனி என்ன செய்யமுடியும் ? அவரது ஆத்மாவுக்கு நல்ல பதவி கிடைக்கப் பிரார்த்திப்பதே நம் கடனாகும். வளர்த்தோர்க்கும் உடன் பிறவிகளுக்கும் அன்பர்களுக்கும் எங்கள் அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

க. பெ. சங்கரலிங்க நாடார்,
பம்பாய்.

* * *

அன்பர் திருமேனிநாத நாடார் இவ்வளவு இளமையில் நம்மைவிட்டுப் பிரிந்தமை அறிந்து பெரிதும் துயரமடைந்தேன். நான் அவரை நேரில் அறியேனுயினும், அவரது குணநலங்களைக் கேட்டிருக்கிறேன். எனது அனுதாபத்தை உரியவர்கள் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திராதிபர்,
" லோகோபகாரி "
சென்னை.

* * *

நன்னேக்கமுள்ள எனது ஆப்த நண்பர் திருமேனிநாதர் அவர்கள் விண்ணுலகம் சென்ற சமாசாரம் பத்திரிகையில் கண்டு விசனமடைகிறேம்.

கனம். நாதரவர்கள் பத்திராதிபர் ஸ்ரீமான் முத்து நாடாரவர்களுடன் மேலக்கோட்டையூர், சின்னையாபுரம் நாடார்களை ஒற்றுமை செய்துவைக்கும் பொருட்டு வந்தபோது அவர்கள் பிரசங்கமாரியைக்கண்டு அவர்களைச் சிநேகிக்கலானேன்.

அதன் பின் சுமார் 2 வருஷத்திற்கு முன் பத்திரிகைக்கு சந்தாதார்கள் சேர்க்கவும், சந்தாப்பணம் வசூல் செய்யவும் இங்கு வந்தவர் எங்கள் வீட்டில் நாலைந்து நாள்வரை தாமதித்திருந்தார். அதுகாலத்திலே சாப்பாட்டை மட்டுப்படுத்திவருவதைக் கண்டேன். தமது அழகிய நெற்றியில் சந்தனத்தினுல் நாமம் போட்டுக்கொள்வார். அவருடைய நற்குணங்களையும் நற்செய்கைகளையும் கண்டு எங்கள் வீட்டில் யாவரும் சந்தோஷப்படுவார்கள். இப்போது விண்ணுலகம் சென்ற சமாச்சாரம் கேட்டு எங்கள் குடும்பத்தில் யாவருக்கும் கண்ணீர் சொரிகிறது. பத்திரிகையில் வரும் அவர் கட்டுரைகளைக் கண்டு கண்டு இன்புறுவோம். இவ்விடம் வந்திருக்கும்போது இரவில் 3-மணி 4-மணிவரை விழித்திருந்து வியாசம் எழுதுவார். இப்படியுள்ள ஒருவரை இதுவரை 35 வயதான நான் எங்கும் கண்டதில்லை. அவர் உயிர் நீத்தது ஜெகதீசன் திருவிளையாடல் என்று எங்கள் மனதை ஆற்றிக்கொள்கிறேம். அவர் குடும்பத்திலுள்ள யாவரும் ஆறுதலடையவேணுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

மீ. சி. சுந்தர நாடார்,
போடிநாயக்கனூர்.

* * *

நண்பர் திருமேனி நாதரவர்கள் அகால மரணத்துக்கு எனது பூரண அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருப்புக்கோட்டை யல்ல நாடார் உலகமே ஒரு பரிசுத்த வாலிப

## கொலை மேற் கொலை.

### பித்தனு, பிசாசா ?

### பெண்கள் நாய்கள் போல் தோன்றினராம்.

ராமநாதபுரம் ஜில்லா சாயல்குடிக்குக் கிழக்கே பெரியகுளம் என்னும் கிராமமிருக்கிறது. அதில் வைசூரியால் வருந்திய சண்முகத்தேவன் என்பவன் 25—3—28 மாலை சோமுதல் புத்தி சுவாதீனமற்றுக் காட்டுவழி செல்லத் தலைப்பட்டான். அன்னவனின் தம்பிபின் தொடர்ந்துபிடிக்கஆரம்பித்தான். அவன் தம்பியென்றும் பாராட்டாதுகழுத்தைப் பிடித்து நெருக்கவே தம்பியானவன் நிலைடைந்து ஊர் சேர்ந்து பின் நாலைந்து பேர்களோடு தேடிப்பார்க்கையில் தென்படவில்லை. 26—3—28 காலை சுமார் 8—மணிக்கு கடி சந்தையெனும் கிராமத்திற்கும், பெரியகுளத்துக்கும் இடையில் பாட்டையில் வந்த சுமார் 45 வயதுள்ள மறவ குல மாதொருவளை அப்பித்தன் ஆயுதமில்லாது கையப்புடைக்கவே அம்மாது உயிர் நீங்கினள். பின்பு 1 பர்லாங்குக்கு அப்பால் சம்பைவியாபாரம்விற்கச்சென்ற இஸ்லாமிப் பெண்ணை அவன் கொணர்ந்த வெள்ளிக்கா லென்னும் தாரசுத் தடியால் அடித்துக்கொன்றுவிட்டு பின்னும் வழியே செல்லுகையில், ஒரு நாடார் குலப் பெண் அப்பைத்தியப் பாதகன் முன் எதிர்ப்பட்டாள். குதர்க்க குணத்தினுல் முன் இரு பெண்களையும் கொன்ற இப்பாதகன் மூன்றுவது வந்த இப்பெண்ணையும் தன் கையில் வைத்திருந்த தடியினுல் உயிர் வதை செய்யும்போது, அடுத்துவந்த ஓர் மறவ குலப் பெரியார் வந்து தடுக்க அவருக்கும் தடி அடி வீழ்ந்தது. நாடார் குல மாதும் உயிர் நீங்கினள். அப்பெரியார் அலறிய தொனியினுல் சில மனிதர் ஓடிவந்து இப்பாதகனைப் பிடிக்க முயலுகையில் இவன் காட்டு மார்க்கமாக ஓட சிலர் பின் தொடர்ந்து கடைசியாக 4-மைலுக்கு அப்பால்உள்ள கடலாடி யென்னும் கிராமத்தில் பிடித்தார்கள். விசாரணை செய்ததில் "நான் மூன்று நாய்களை அடித்துக் கொன்றேன். நான்காவது ஓர் புலி தப்பி ஓடிவிட்டது" என்றனன். அதன் பின் போலீஸ் மூலமாக முதுகுளத்தூர் கொண்டுபோகப்பட்டான்.

சா. சி. வெள்ளைச்சாமி நாடார்,
கொக்கரங்கோட்டை.

---

நாடாரை இழந்துவிட்டது.

ஏ. பி. ஆதித்தர்,
காயாமொழி.

* * *

உத்தம குலாபிமானியும், அரிய தியாகியும், என்னருமை நண்பருமான வாலிப சிரோரத்தினம் ஸ்ரீ திருமேனி நாதர் பரமபதமடைந்ததாக வாசித்துத் திடுக்கிட்டுப்போனேன். குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை யறிவித்துக் கொள்கிறேன்.

கே. கல்யாணசுந்தரன்,
கச்சினுவிளை.

* * *

நண்பர் திருமேனி நாத நாடார் மரணத்தை அறிந்த மாத்திரத்தில் என் மனம் திடுக்கிட்டுப் போய் விட்டது. நம்முடைய ஜாதியின் நன்மையைக் கோரி உழைக்கும் உத்தமர்களில் அனேகர் தவறி விட்டதைக் கவனிக்கையில் தெய்வத்திற்கு நம்முடைய ஜாதியை இன்னும் முன்னேற்றத்திற்கு விட மனமில்லை போலிருக்கிறது. அருப்புக்கோட்டையில் மாத்திர மல்ல, வேறு எவ்விடத்திலும் நான் இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற அபிமானியைக் கண்டதில்லை. அவருடைய புன்னகை பூத்த முகமும், அழகிய தேசீய உடையும், கண்டோரைக் கவர்ச்சி செய்யும் அழகிய தோற்றமும் சதா என் கண் முன் தோற்றிக் கொண்டிருப்பதுடன், அவருடைய தேசீய, ஜாதீய சேவைகளும் என் மனதை மயக்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வித அபார அபிமானிக்கு நற்கதியை அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ந. அ. மு. முருகேசபாண்டியன்,
பெருநாழி.

---

## மதிப்புரை.

### " இந்திய மாதா "

அமெரிக்க மாது கன்னி காதரைன் மேயோ நம்மிந்திய நாட்டைப்பற்றி யெழுதிய "இந்தியமாதா" எனும் புத்தகத் தமிழ் மொழி பெயர்ப்பு அத்தியாயம் அத்தியாயமாக "தமிழ் நாடு" பத்திரிகையில் முன்னர் வெளிவந்திருப்பதை "தமிழ் நாடு" வாசகர்களறிவர். அவற்றை யொருங்கு சேர்த்து சென்னை கே. எஸ். முத்தையா கம்பெனியார் புத்தக ரூபத்தில் வெளியிட்டிருப்பதில் ஒரு பிரதி எமது பார்வைக்கு வரப்பெற்றேம். பெரிய சயிஸில் 120 பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் முகவுரை தாங்கியிருக்கிறது. புஸ்தகத்தின் முன்புறம் கிளேஸ் கெட்டி தாளாலாகிய அட்டையில் பாரதத் தாய் தாமரை யிருக்கையில் வருத்த முகத்தோடிருக்கும் பாவனையில் அழகிய கலர்படம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. கன்னி மேயோ போன்றவர்கள் நம் நாட்டைப்பற்றி இகழ்ந்தெழுதக் காலமுமாச்சே யென்ற வருத்தமுகம் போலும். வருத்த முகம் மாறிச் சிரித்த முகங்கொள்ளும் காலத்தை யெதிர் பார்ப்போமாக.

கன்னி காதரைன் மேயோ நம் நாட்டில் ஆங்காங்குள்ள ஊழல்களை யெடுத்தெழுதியிருக்கிறர். இத்தகைய ஊழல்கள் அம்மாது நாடாம் அமெரிக்காவிலும் ஏனைய வெள்ளை நாடுகளிலும் இல்லாமலில்லை. அவற்றையெல்லாம் விட்டு விட்டு இந்தியாவை மட்டும்ஊழல்சன்பற்றிபிரமாதப் படுத்தி யெழுதினதும், இந்தியாவில் ஓரோவிடங்களில் உள்ள தவறுகளைக் கொண்டு இந்தியா பூராவையும் அலட்சியப்படுத்தியிருப்பதும் இந்தியர்கள் மனதைப் புண்படுத்தாமலிராது. இந்தியாவிலுள்ள ஊழல்களைக்கண்டு அவற்றை அகற்ற இந்தியர் முயற்சிக்க வேண்டுமென்று இம்மாது பரிந்தெழுதியிருந்தால் போற்றவேண்டியதுதான். அப்படிக்கின்றி குறைகூறி இந்தியர் சிலாகிக்கத்தக்கவரல்லரென்றும், ராஜ்ய பாரந் தாங்கத் தக்கவரல்லரென்றும் வெளிப்படையாகும்படி யெழுதியிருப்பது தான் நம் நாட்டில் அப்பெண்ணுக்குள்ள துவேஷத்தைக் காட்டுகிறது.

தான் சர்க்கார் பிரதிநிதியில்லை யென்றும், இப்புஸ்தக வெளியீட்டால் இந்தியர்கள் மனவருத்தம் கொள்வார்கள் என்றும் கூறுகிறர். இங்கே தான் இப்பெண்ணின் மனப்போக்கு மர்மம் புலனுகிறது. தான் களங்கமற்றிருந்தால் இதைச் சொல்லவேண்டியதில்லை. குற்றம் உள்ளே குடிகொண்டிருக்கத்தான் இதைக் கூறுகிருற்போலாகிறது. உண்மையில் அனுதபத்தோடெழுதியிருந்தால் தன்னைச் சந்தேகிக்கவிடாமற் செய்ய வேண்டுமென்று பிரயாசைப்பட வேண்டியதில்லை. உள்ளதைச் சொல்வதில் குற்றமில்லை யெனப் பின் தானே தைரியங்கொண்டிருக்கிறர். எந்த உண்மையைச் சொன்னுலும் பிறர் மனம் புண்படாமலிருக்க வேண்டுமே யென்று புத்தி கொள்ள வேண்டாமா ? இப்புஸ்தகங்கண்டு ஏனைய நாட்டவர் இந்தியாவை இகழ்பட நினைத்து விடக்கூடாதென்பது தான் அவர்களுக்கு இந்தியர் செய்யும் வற்புறுத்தல்.

கன்னி மேயோ எழுதி வெளியிட்டிருக்கும் ஆங்காங்குள்ள நம் ஊழல்களையெல்லாம் நீக்கிக் கொள்ள நம் நாட்டார் பாடு கொள்ள வேண்டும். புறநாட்டு மாது நம்மை ஏளனம் செய்துவிட்டாளே யென்று ஆத்திரத்திலேயேயிருந்து விடாது சீர்கேடுகளைக் களைய முற்படுவதே சிறப்பு. மேயோ இப்புஸ்தகம் வெளியிட்டது நம் ஊழல்கள் தவிர்க்க நமக்குள் ரோஷம் பொங்குவதில் முடியட்டும். இப்புஸ்தகத்தை ஒவ்வொரு இந்தியரும் வாங்கிப் படித்தல் அவசியம். விலை ரூ 1—8—0. தேவையானவர் "கே. எஸ். முத்தையா கம்பெனி, 188. கோவிந்தப்ப நாய்க்கர் தெரு, மதராஸ்" என்ற விலாசத்திற்கெழுதிப் பெறவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தூர வெளியையனத விழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

விபவ வருஷ சித்திரை மீ ௪ உ.

## கண்ணாடி என் செய்யும்?

மூக்கறுபட்ட ஒருவன் கண்ணாடியைப் பார்த்து அது தன் முக்கிய அங்கத்தின் ஓர் பாகத்தை ஊனப்படுத்திக் காட்டுகிற தென்று கண்ணாடிமேற் கோபித்துக் கொண்டு அதைக் கல் மீது போட்டுடைத் தானென்று ஒரு கதை சொல்வதுண்டு. அதைப்போல் ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களும் "குடியரசு" பத்திரிகையும், நம் நாட்டில் மதத்தின் பேராலும் சுவாமிகளின் பேராலும் ஒருவரை ஒருவர் கொடுமைப் படுத்தியும், அடிமைப்படுத்தியும் வருவதையும், அதனால் நம் பாரதநாடு முழுமையும் அன்னிய நாட்டுக்கு அடிமைப் பட்டுப் போனதையும் உள்ளதை உள்ளவாறு மக்கள் தெள்ளிதினுணரும் வண்ணம் கூறி வருவதைக்கண்டு பார்ப்பனர்களும் அவர்களுடைய கூலிகளும் "குடியர"சைக் கோபித்து திரு. நாயக்கர் மேல் பாய்கின்றனர். சில பத்திரிகைகளும் அதை ஒத்து ஓலமிட்டுவருகின்றன. திரு நாயக்கர் என்செய்வார்! "குடியரசு" என் செய்யும்!!

எண்பொருளவாகச் செலச் சொல்
[லித்தான் பிறர்வாய்

நுண்பொருள் காண்பதறிவு

எனும் முது மொழியை அறியாமல் "குடியர"சைக் கோபிப்பதும், திரு. நாயக்கர்மீதுபாய்வதும் அறியாமையன்றோ?

தீசமும்பாவமும் நிறைந்ததொழிலைச் செய்யும் ஒருவன் பிராமண குலத்திற் பிறந்தானென்பதற்காக அவனைச்சாமி யென்று கும்பிட்டு அடிமைப் படாதே யென்று சொல்கிறது "குடியரசு". வேசிகளையும், தாசிகளையும் வேண்டியமட்டும் வைத்துக்கொண்டு காசு பணம் சம்பாதிப்பதற் குறைவிடமாயுள்ள ஆபாசமுள்ள கோயில்களுக்குப் போகாதே என்று தான் திரு. நாயக்கர் சொல்கிறார். மனிதனை மனிதன் தீண்டக்கூடாது; நாயும் கழுதையும், பன்றியும், பூனையுங் கூட நடக்கும் தெருவில் மனிதன் நடக்கக் கூடாது; மனிதன் படிக்கக்கூடாது; படிப்பதைக் கேள்க்கக்கூடாது; ஒருவன் ஒருவனுக்குத் தர வேண்டிய கடனைக் கொடாமல் இறந்துபோனால் அவன் மறு ஜென்மத்தில் கடன் கொடுத்தவனுக்குப் பிள்ளையாக வந்து பிறந்து உழைக்கவேண்டும்; ஆனால் பிராமணனுக்கு எல்லாரும் உழைத்துக் கொடுக்க வேண்டும்; கொடாதவனுக்கு நரகம்தான் கிடைக்கும்; பிராமணன் பிறர் சொத்தை பாலாத்காரமாக எடுத்துக்கொண்டாலும் தோசமில்லை என்றிவ்வாறு இழிவு நிறைந்த எந்தச் சாஸ்திரங்களையும் நம்பாதீர்கள்; படியாதீர்களென்று பகர்கிறது "குடியரசு". மதத்தின் உண்மையாதென்பதை உணராமல் மதம் மதம் என்று கூறும் கொடுமைகளையும் குருட்டுத் தனமாய் நம்பாதீர்களென்றுதான் கூறுகின்றார் திரு. நாயக்கர். மூட நம்பிக்கைகளையும் மூடாசாரதனைகளையும் விட்டு உண்மையுணருங்கள்; உறுதியுடன் நில்லுங்கள்; அறிவுடையாராகுங்கள் என்று நாயக்கர் கூறுகின்றார்; "குடியரசு"ம் கூறுகிறது. தேச, சமூக முன்னேற்றங்களுக்குப் பாடுபடும் எல்லாப் பத்திரிகைகளும் அவ்வாறே பகர்கின்றன. எல்லாத் தேசாபிமானிகளும் அவ்வாறுதான் பகர்கின்றார்கள். சந்தேகமுள்ளவர்கள் 28-3-28ல் வெளிவந்த "நவசக்தி"யின் தலையங்கத்தைப் படித்துப் பார்க்கட்டும். அதை நன்கு படித்துணர்ந்தவர்கள் உண்மையுணர்வார்கள். சமயத்தின் பேரால்ச் செய்யும் கொடுமைகளைக் கற்றறி மூடர்களும் விட்டொழிக்கும் வண்ணம் நுண்ணறிவால் தீட்டப் பட்டிருக்கிறது "நவசக்தி"யில். கற்றோரும், மற்றோரும் கண்டுணரும்படி சுத்த வெள்ளையாய்க் கூறுகிறது "குடியரசு". மாடென்றாலும் பசுவென்றாலும் ஒரு பொருட்கொண்ட வார்த்தை தானென்பதை அறிவுடையார் ஒப்பவே செய்வார். மதுரையில் நாடார் மகாநாட்டில் தலைமை வகித்த ஸர். சதாசிவ ஐயர் நாடார்களை வர விடாமற்றடுத்துவைக்கப்பட்டிருக்கும் கோயில்களிலெல்லாம் சுவாமிகளிருக்க யோக்கியதை கிடையாது; பிசாசுகள் தானிருக்கக் கூடும்; அக்கோயில்களைக் கண்ணால் கூடப் பார்க்காதீர்களென்று சொல்லியிருக்கிறார். வைதீகர்களுடைய அறிவிலாச் சுய நலத்தால் இந்து மதம் செல்லரித்துப் போய்விட்டதென்று சொல்லியிருக்கின்றார் சுவாமி விவேகானந்தர். சமீபத்தில் செட்டிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் தற்போதுள்ள கோயில்களெல்லாம் தாசி வீடுகளுக்குச் சமானமென்றார் மகாத்மாகாந்தி. இந்திர விழா வென்னும் ஏமாற்றத்தைத் தவிர்த்து வைத்தார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா. யாக மென்னும் பெயரால் அரசர்களையும் பிரபுக்களையும் ஏமாற்றி ஆடு குதிரை முதலிய ஜீவர்களைக் கொன்று தின்னும் கொடுமையைத் தவிர்த்தார் புத்த பகவான். ஒவ்வொரு மனிதனும் தினமொரு விக்கிரத்தைச் செய்து வணங்கி அரேபியா வெங்கும் மனிதர் வசிக்க இடமில்லாமல் எங்கும் விக்கிரகமாய்க் குவிந்துபோகக் கூடிய மூடர் காலத்தை ஆங்கு முற்றும் போக்கினார் முகம்மது நபி. சாத்தானைத் தெய்வமாக வணங்கும் வழக்கத்தைத் தவிர்த்தார் ஏசு கிறிஸ்து நாதர். இவ்வாறே ஒவ்வொரு காலங்களிற்றோன்றிய மகான்களெல்லாம் மக்கள் மனமயக்கமொழியப் பல்வியக்கங்களையுண்டுபண்ணிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபோல் திரு. நாயக்கரும் மக்கள் நல்வாழ்வெய்துவதற்குரிய பலவழிகளைக் காட்டுவதிற் குற்றமொன்றில்லை. ஆகையால் மூக்குக்குறைக்கு கண்ணாடி யென் செய்யும்? எனக் கடாவுகின்றோம்.

---

# குறிப்புகள்.

## புதுப் பிராமணர்கள்.

பம்பாயில் ஆயிரம் பஞ்சமர்களை ஆசார சீர் திருத்தக்காரர்கள் பூணூல் போட்டு உபநயனம் பண்ணிப் பிராமணர்களாகச் சுத்திசெய்திருக்கின்றார்களாம். இதனால் அவர்கள் சிறிது காலத்திற்குள் தீண்டப்படாதவர்களென்ற கொடுமையிலிருந்து ஒருவாறு தப்பித்துக் கொள்ளலாம். அதுபற்றி யாவரும் சந்தோஷங்கொள்ளவுங் கூடும். ஆனால் அவர்கள் பிறப்பினால் பிராமணர்களாயுள்ளவர்களுடன் சம்பந்தம் செய்து அசல்ப் பிராமணர்களாகி சகவாச தோஷத்தால் உயர் குலப் பித்துண்டாகிவிட்டால் மற்றவர்களுக்குச் சங்கடமுண்டாகாதிருக்குமா? இருக்காது. ஆகையால் ஆசார திருத்தக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களைத் தங்களோடு சகோதரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமே யொழிய பிராமணர்களோடு சேர்த்துவிடக் கூடாது. பிறப்பினாலுயர்வு எனப் பேசும் பிராமணர்கள் கொள்கை அதிகரித்தால் பிராமணரல்லாதாருக்கே கஷ்டம் அதிகமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

## ஜஸ்டிஸ்கட்சிக்கு ஜே!

இயற்கைச் சாதகங்களாயுள்ள காற்று, மழை, வெய்யில் முதலியவைகள் எப்போதும் ஒரே தன்மையில் நில்லாமல் சுழன்று வருவதுபோல் மனிதர்களின் மனோ நிலைமையும் மாறுபட்டு வருகிறதென்பது அனுபோகத்தில் நன்கு தெரிய வருகிறது. அதனாற்றான் "தெற்கே யடித்த காற்று திருப்பியுமடிக்கு" மென்று ஒரு பழமொழியு மேற்பட்டிருக்கிறது. இதை அறியாமலே சென்னை மைலாப்பூர்க் கூட்டத்தார் காங்கிரசும், மகாத்மா காந்தியும் தங்கள் சார்பிலிருப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு பற்பல அக்கிரமங்களை யெல்லாம் செய்து வந்தார்கள். சுயேச்சைக் கட்சியை துணையாக வைத்துக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைக் கரைத்துவிடப் பார்த்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரெல்லாம் தேசத்துரோகிகளென்று திட்டினார்கள்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத்
[தங்கள்

இகழ்வார் பொறுத்தற்றலை

என்னு முதுமொழிக்கேற்ப ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள பல பெரிய மனிதர்கள் பொறுமையைப் பூஷணமாய்க் கொண்டதிலிருந்தும், திரு. நாயக்கர் சுயமரியாதை இயக்கம் தோன்றியதிலிருந்தும் சுயராஜ்யக் கட்சி கரைந்து, சுயேச்சை கட்சியும் மறைந்து, கூட்டுக் கட்சி வலுத்து ஜஸ்டிஸ் கட்சிக்கு ஜே! என்று எங்கும் சப்திக்கின்றது. திவான்பகதூர் கிருஷ்ண நாயரவர்கள் சட்டமந்திரியாக வந்திருப்பதும் உத்தம தேசபக்தர் சுபாஸ் சந்திர போஸ்க்கு கல்கத்தா மேயர் பதவிகிடையாமற் போனதும் பிராமண தாஸர் திரு முத்துரங்கத்திற்குத் தாலுகாபோர்டு பதவிகூட கிடையாமற் போனதும் மற்றும் பல தேர்தல்களிலும் பிராமண வால்கள் அறுப்பட்டிருப்பதும் சுயராஜ்ஜியக் கட்சிக்குச் சாவுமணியடித்தாய் விட்டதென்பதன் அறிகுறியாம். இதைக்கண்டு வயிற்றெரிச்சல் கொண்ட திரு. சத்தியமூர்த்தி நாங்குநேரியிற்போய் மாரடித்துக் கொள்கிறார். திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் மூன்றுகாடு போட்டுக் கொண்டு ஐரோப்பாவுக்குப் புறப்பட்டப் போகிறார். திரு. ராஜகோபாலச் சாரியார் புது மனுதர்ம சாஸ்திரம் உற்பவிக்கப் பார்க்கிறார். சுயராஜ்யக் கட்சியின் முக்கிய தலைவர் திரு. பண்டிதநேரு இனி இங்கிருப்பது சுகமில்லை யென்று ஐரோப்பா சென்றார். மீண்டும் அமெரிக்கா செல்லப் போகிறார். மகாத்மா பூரண வொத்துழையாமைக்கு உலைவைத்த தோஷம் இவர்கள் எங்குசென்றாலும் விடாது விடாது. இக்கெதிவருமென்றறியாமற்கொக்கரித்த கூட்டத்தார்களை நம்பி இன்னும் நம் நாட்டார் ஏமாந்துவிடாமலிருப்பார்களாக.

## பிராமணக்கோட்டை பிடிபட்டுவிட்டது.

பிராமணர்கள் மதத்தின்பேரால் கட்டிய கோட்டைக்குள்ளே பிராமணரல்லாத மக்கள் பலதுன்பத்திற் காளாகி வந்திருப்பதுடன் பிரிட்டிஷ் ஆட்சியிலும் பெரிய துரைமார்களுக்கு முதுகு சொறிந்து கொண்டு பற்பல இலாக்காவின் முக்கிய அதிகாரங்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டு உத்தியோகவர்க்கங்களை யெல்லாம் பிராமணமயமாக்கி விட்டார்கள். கவர்னர் நிர்வாக சபையில் பதினெட்டு வருடங்களாக சட்ட மந்திரிபதவியை ஐயர், ஐயங்கார், சாஸ்திரியார் ஆகிய பிராமணர்களே வகித்துவந்தார்கள். இதனால் பல இலாக்காக்கள் பிராமணர்கள் சொந்தம்போலாய் விட்டதுடன் போலீஸ் இலாக்கா பிராமணர்களுக்கு சுவிகாரச் சொத்துப்போலாய் விட்டது. இதனாலுண்டான சங்கடங்கள் சொல்லத்தரமன்று. விரிக்கிற் பெருகும். இவ்விக்கினங்களெல்லாம் டாக்டர். நாயர், ஸர். தியாகராஜர், முதலியவர்களால் ஏற்படுத்தப்பெற்ற பிராமணரல்லாத வியக்கத்தால் ஒருவாறு தீர்க்கப்பட்டு வருகின்றன வென்றாலும் முற்றுமொழிந்தபாடில்லை. ஆயினும் திரு. நாயக்கருடைய சுயமரியாதை இயக்கத்தால் அசுத்தமதக்கோட்டையும் அதிகாரக் கோட்டையும் தகர்க்கப்பட்டுவிடும். அதிகாரத்தை வளைந்து கட்டிக்கொண்டிருந்த சட்ட மந்திரிவேலை சமீபத்தில் திவான்பகதூர் ஸ்ரீமான் கிருஷ்ண நாயரவர்களுக்குக்கிடைத்திருக்கிறது. இவர் பிராமணரல்லாத கட்சித் தலைவர்களில் ஒரு முக்கிய புருஷராகையால் பிராமணக் கோட்டை பிடிபட்டு விட்டதென்பதிற் சந்தேகமில்லை.

## இந்தியாவில் இந்தியருக்குச் சுவாதீனமுண்டா?

எகிப்த் நாட்டில் சர்வதேச சங்க உடன்படிக்கைக்கு விரோதமாக பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் நடவடிக்கை நடத்துவதாகவும், அவ்வாறு நடத்துவது எகிப்தின் உரிமையைக் கெடுப்பதாகுமென்றும், இதனால் எகிப்தை இழந்துவிட நேருமென்பதுபோல் பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை பண்ணி எகிப்துக்கு சுவாதீனமில்லையா என மிகவும் இரக்கத்துடன் சில தேசியப் பத்திரிகைகள் நீலிக் கண்ணீர் வடிக்கின்றன. இந்தியாவின் எல்லைகடந்து எத்தனையோ மைல்களுக்கப்பாலுள்ள எகிப்து நாட்டிற்கு இரங்கும் நமது தேசியப் பத்திரிகைகள் இந்தியாவில் உயர்ஜாதிப் பித்தர் தணிவதற்கு இதுவரைவும் என்ன அவிழ்தங்கொடுத்து வந்திருக்கிறது? இனிமேலென்னதான் கொடுக்கப் போகிறது? வர்ணாச்சிரம தர்மமெனுஞ் சண்டாள சாகரத்தின்கரை தாண்ட முடியாமற் றத்தளிக்கும் தாழ்த்தப்பட்டவர்களைக் கரையேற்ற இதுவரையும் என்னமுயற்சி செய்திருக்கிறது? இனிமேலென்ன முயற்சி செய்யப் போகிறது? இந்தியாவில் பால்ய விவாகம் தான் நடக்க வேண்டும்; தாசிமகள் தாசியாகத்தானிருக்க வேண்டும்; தாழ்த்தப்பட்டவன் ஒரு விறகுகடையனாவது முன்னேறக் கூடாது; இவைகளைத் தடுப்பதற்குச் சட்டம் செய்தால் மதம் போய்விடுமென்ற பிரசாரங்களைப் பத்திபத்தியாய் நிறப்பிக்கொண்டு எகிப்துக்குக் கண்ணீர் வடிப்பதும் யோக்கியமாகுமா? இந்தியாவில் இந்தியர்க்குச் சுவாதீனமுண்டாவென இனி யாவது எண்ணிப்பார்க்கட்டும்.

## மதுரையில் சந்தா வசூல்.

மதுரையில் சந்தாவசூல் செய்வதற்காக நமது ஆபீஸ் குமஸ்தா கண்பர் எஸ்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சுதேசியம்.

சுதேசியம் என்பது சொந்த தேசப் பற்றென்பதாகும். ஒரு தேச மக்கள் தம் தேசத்தில் பற்றுடைத்தாரா யிருத்தல் இயல்பு. அவ் வியல்பிலார் அத் தேசத்திற் குரிய ரல்லர் என்பதில் குற்ற மில்லை. உரியரல்லர் எனின் பிற நாட்டு மக்களா? அப்படியு மில்லை. பிறப்பில் சுதேசிகளே யெனினும் சுதேசிக் குரிய கடமை நீங்கி யிருக்கும் காரணத்தால் பரதேசிகள் யென்கின்றோம். கடமை கொண்டொழுகும் தன்மையே மனிதத் தன்மையாகும். எல்லோரும் மனிதத் தன்மை பூண்டொழுக வேண்டியது தான் கிரமம். அந்தக் கிரம வழி நின்று ஒழுகலே கடமை நிறைவேற்றியதாகும்.

ஈண்டொரு வினா வெழுகின்றது. என்னெனின் பரோ? சொந்த தேசப் பற்று பற்றி நிற்கும் மக்கள் மேலாம் பதமடைய பிற தேச சம்பத்தால் ஏது விருக்க அதை வைத்துக் கொள்ளக் கூடாதா? என்பதே. வைத்துக் கொள்ள வேண்டியது தான். ஆனால் அவசியம் கொள்ள வேண்டியதைக் கொண்டும் தள்ள வேண்டியதைத் தள்ளவுமே யென்கின்றோம். நிர்வாணமாய்த் திரியும் மக்களுள்ள தேசத்தில் பிற நாட்டார் துணி கொடுத்து அம் மக்களை மேலாம் பதத்திற்குக் கொண்டு வருகையில் சுதேசியம் என்ற பெயரால் பிற நாட்டுத் துணிகளைத் தவிர்த்து அவர்களை நிர்வாணமாகவே யிருக்கச் செய்ய விரும்புவர் யாரு மில்லை. அந் நிலைமையில் சுதேசியம் எற்றுக்கு? அவசிய மின்றி ஆடம்பரத்திற்காகப் பிற நாட்டுச் சம்பந்தம் வைத்துத் தம் நாட்டுப் பிரகாசத்தை யொழித்து விடா திருக்கவே சுதேசியம் வற்புறுத்தப்படுகிறது.

சுதேசியம் தம் நாட்டுப் பற்றிலேயே நிலைத்திருப்பதல்லால் பிற நாட்டு விஷயத்தில் வெறுப்புக் கொள்வதி லிருத்தல் கூடாது. அதில் விருப்பும் வெறுப்பும் கொள்ளக் கூடா தென்ப திலேயே முடிய வேண்டும். பிற நாடு பற்றிக் கவலை வேண்டுவதில்லை. தம் நாட்டை எவ்வகைத்தெலாம் மிளிர்வுறச் செய்ய வேண்டுமோ அம் மட்டிலுமே யிருத்தல் என்க.

சுதேசியத்தைச் சொந்த தேசப் பற்றென்றோம். அப் பற்றை எம் முகத்தில் காட்டி வருவ தெனின், நடைமுறையில் என்க. மனிதர் நடை முறையில் பல பல தேவைகள் உண்டு. முக்கியமாய் உண்ணல், உடுத்தல், உபயோகித்தல் என்பவை மட்டும் எடுத்துக் கொள்வோம். உண்ணல் பற்றி யெடுத்துக் கொள்ளும்போது தேசப் பொது உணவு ஒன்றுண்டு. இயற்கையில் அவ் வுணவு தான் அத் தேச நிலைக் கொப்ப ஈஸ்வரனால் அளிக்கப்பட்டதாகும். அதை விடுத்து பிற நாட்டுப் பழக்க வழக்கத்தால் பிற நாட்டு உணவை வைத்துக் கொள்ளுதல் தேக ஆரோக்கியக் குறைவை சம்பாதித்துக் கொள்வதில் முடிந்து விடுகிறது. இது நிற்க,

தம் நாட்டு உணவுச் சாகுபடித் தொழில் மட்டுப் பட்டு அந் நாட்டு அவ் வுணவு விபசாயிகள் தொழில் கெட்டுப் போகாதிருக்கக் கவனம் வேண்டும். அவர்கள் தொழில் மட்டுப் பட நாட்டில் விவசாயம் குன்றி விடுகிறது. இதனால் ஏழை மக்கள் பாடு திண்டாட்டம். பண முடைத்தார் பணங் கொண்டு எவ்வகைத்தும் உணவு பெற்றுக் கொள்வார்கள். இத்தால் நாட்டில் ஏழை மக்கள் பசிப் பிணி கொள்கிறார்கள். நாட்டில் ஒரு பக்கம் பசி யேப்பமும், ஒரு பக்கம் புளிச்ச வப்பமுமாய் இருந்து வரும். எத்தனை நாட்களுக்குத் தான் ஏழைகள் பசி பொறுப்பார்கள்! இல்லாதவன் இருப்பவனிடம் பறித் துண்க வேண்டியது தானென்னும் முறை நிலவிவிடும். அதனால் நாட்டில் கொள்ளையும், கொலையும் தான். சுருக்கமாக ரத்தப் பெருக்கமாகும் என்போம். பின் நாட்டில் அமைதி யேது? ஆண்டவன் விருப்பம் அனைத்து மக்களும் க்ஷேமமா யிருக்க வேண்டு மென்பது தான். அப்படியே யிருந்து கொள்ள அறிவு கொடுத்திருக்கிறார். அவ் வறிவு கொண்டு செம்மைப் படுத்திக் கொள்வதே மனிதன் கடமை. ஒரு நாட்டு மக்கள் ஒரு குடும்பத்தினர் போன்றனர். ஒரு குடும்பத்தில் பலர் பசியோடிருக்கச் சிலர் உண்டு கொழுத்து வருவ தென்றால் என்ன வாஞ்சை யங்கு காணக் கிடக்கின்றது? வாஞ்சைப் பாசம் பிணைத்திருந்தா லன்றோ இறைவன் திருப்தி கொள்ளக் கூடும்? இயற்கையில் ஒரு குடும்பத்தில் பட்டினி ஒரு பக்கமும், பசி யற்ற சாப்பாடு ஒரு பக்கமும் இருத்தல் அரிது. அச் சுபாவத்தையே விரிந்த நோக்குடன் தேசத்தின் பால் செலுத்த வேண்டும். இதுவே சுதேசியம்.

ஊண் பற்றி நாட்டைக் கவனிக்க வேண்டிய அவசியம் அறிந்தோம். இனி உடுத்தல் பற்றி யோசிப்போம். இதுவும் முந்தியதின் பான்மைத்தேயுளது. நிர்வாணதேசத்திற்கு அயல்தேசத் துணி அவசிய மில்லை யென்று யார் தான் சொல்லக் கூடும்? கற்ப கோடி காலமாய் சுய தேசத் துணி யுடுத்தி வந்து அவ்வகையில் நாட்டுக்கு க்ஷேமம் நல்கி வந்ததிலிருந்து பிறழ்ந்து விடா திருக்கவே கூறுகின்றோம். தம் தேசத் துணி தவிர்த்துப் பர தேசத் துணி கொள்வதால் வரும் பாதகந்தான் யாது? வறுமை வருமே யென்க. வறுமையால் நாடு சிறுமை யடையும் என்பதில் பொய்யில்லை. பிற தேசத் துணி புகுதலாலும், சுய தேசத் துணி கழிதலாலும் எங்ஙனம் வறுமை யுறும்? என்ற வினா வுண்டெனின் விடை தருவது தொழிற் கேடும், பணச் செலவுமே யாம். தேச தேவைக்குத் தக்கபடி துணி நெய்வதில் அத் தேச மக்களில் பல்லாயிரக் கணக்காக ஈடுபட்டிருப்பர். அவர்கள் அத் தொழில் ஈடுபாட்டால் வயிற்றுக்கு ஆகாரம் தந்து வருவர். பருத்தியைப் பஞ்சாக்குவதும், பஞ்சை நூலாக்குவதும், நூலைத் துணியாக்குவதுமான பல வேலைகளில் ஜீவனம்சம் செய்து வருவர். பிற தேசத் துணி புகுதலால் இவர்களின் கதி என்னவாகும்? பாவம்! தொழில் ஒழிகிறது. தொழில் ஒழியின் வயிறு காய்கிறது. வயிறு காயின் மானம் வேண்டியது தான். ஏன் வேறு தொழில் பார்க்கொணாதோ எனக் கேட்பரோ? கேட்பின் இவர்களை வா வேற்றுக் கொண்டிருக்கும் வேறு தொழில்கள் அரிதென்றே அறைவோம். அந்தந்தத் தொழில்களில் அவ ரவர்கள் ஈடுபட்டுக் காலங் கடத்திக் கொண்டிருக்கையில் இந்தத் தொழிலாளர்களுக்கு இடங் கிடைக்கு மென்பதில் என்ன நம்பிக்கை? நின்று பரிதபிக்க வேண்டியது தான். வேறு தொழில்கள் தேடிக் கொள்ளும் வரையில் இவர்கள் பாடு தான் என்னே!

(தொடரும்.)

ஓர் சுதேச அபிமானி.

---

ராமசாமி யென்பவரை அனுப்பி யிருக்கின்றோமாகையால் ஆங்குள்ள நேயர்களனைவரும் சந்தாவசூலுக்குதவி யாயிருந்து கண்ணியத்துடன் சந்தா பணத்தைக் கொடுத்தனுப்பி மித்திரன் அபிவிர்த்தியை மென்மேலும் நாடக் கேட்டுக்கொள்கிறோம்.

## தவறி விட்டன.

போடிநாயக்கனூரிலும், அதைச் சார்ந்த திருமலாபுரத்திலும் உள்ள நமது சந்தாநேயர்களிடம் பணவசூல் செய்யும் பொருட்டு நம்மித்திராபி மானிகளிலொருவரும், போடிநாயக்கனூர் வாசியுமான ஸ்ரீமான் மீ. சி. சுந்தரநாடாரவர்களுக்கு யாம் அனுப்பி யிருந்த ரசீது புஸ்தகமும், சந்தாப் புள்ளிகள் ஜாபிதாவும் அன்னவர் மூணார் மலைக்குப் போயிருந்த சமயத்தில் தவறிவிட்டன. ஆகையால் அவற்றைக் கண்டெடுத்தவர் தயவுசெய்து நம் மித்திரன் ஆபீசுக்கனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்வதோடு, அவற்றைக் கொண்டு யாரும் மோசடியாக வசூல் செய்துகொண்டு போய் விடாமல் கவனித்துக்கொள்ள ஷை சந்தா நேயர்களுக்கு எச்சரிக்கை செய்துகொள்கின்றோம்.

# செய்தித் திரட்டு.

அருப்புக்கோட்டை நாடார்களால் கொண்டாடப்பெற்று சமீபத்தில் முடிவெய்திய ஸ்ரீ முத்துமாரியம்மன் பொங்கல் உற்சவ 6—வது மண்டபப் படியாகிய அருப்புக்கோட்டையைச் சார்ந்த புளியம்பட்டி நாடார்கள் உபய மண்டபப்படி தினத்தன்று தங்கமெடல் பரிசுபெற்ற சங்கீத சங்கத்தொனி ராஜா அ. குமாரசாமிநாடார் பிரதம சிஷ்யர் ஸ்ரீ அண்ணாமலை நாடாரவர்கள் தாம் புளியம்பட்டி பஜனாலய மாணவர்களுக்கு உபாத்தியாயராயிருந்து அவர்களைத் திறமையாய்ப்பாடும் நிலைமைக்குக் கொணர்ந்துவந்த உபகாரத்தை முன்னிட்டு ஷை மாணவர்களால் பொதுஜன உபகாரியும் மதுரையில் பிரபல வியாபாரியுமான ஸ்ரீமான் சுப்பையநாடார் அவர்கள் முன்னிலையில் தங்கச் சங்கிலி யொன்று பரிசளிக்கப் பட்டார்.

*　*

சென்னை துறைமுகம் வந்து சேர்ந்த லண்டனுக்குப் போகவேண்டிய "மொர்க்காரா" என்ற கப்பல் தீவிபத்திற்குள்ளாகி விட்டது. கப்பலிலிருந்த பருத்திப்பொதி, புகையிலை, சணல் முதலியவற்றில் முதலில் தீப்பற்றியது. அவற்றைவிட்டு கப்பலில் வேறு பாகத்தில் தீ பரவவிடாதபடி தீயணைக்கும் யந்திரங்களினால் பாதுகாத்துக் கொண்டார்கள். உயிர்ச் சேதமில்லை. பொருள் நஷ்டமதிகம்.

*　*

ஜெர்மனியில் ஸாக்ஸன்ய தகடு வேலைச் சங்கத்தினர், 20000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த காரணத்தில் நாளது ஏப்ரல் ௴ 12௳ முதல் கதவடைப்பு செய்யப்போகின்றார்கள். இதனால் 200000 தொழிலாளர்களுக்கு பாதகம் விளைந்திருக்கிறது.

*　*

ஏற்கனவே இங்கிலீஷ் சானலை நீந்திக்கடந்த மிஸஸ் கிளிட்ஸ், பரீலாமையினின்றும் புனடலியோனுவுக்கு 12½-மணி நேரத்தில் ஜிப்ரால்ட்டர் ஜலசந்தியை நீந்திச் சென்றனர். இதுவரையில் ஒருவரும் ஜிப்ரால்ட்டர் ஜலசந்தியை நீந்தினவர் ஒருவருமில்லை.

*　*

பூனாவில் அனுமார் ஜயந்தி தினத்தன்று பிரமச்சர்ய ஆசிரமத்தினர் 800 காவ்தாக்களை இந்துமதத்தில் சேர்த்திருக்கின்றனர்.

*　*

ஆப்கன் அமீரும் அவரது மனைவியாரும் பாரிஸைவிட்டுப் பர்லினுக்கு வந்து ஆப்கன் ஸ்தானாதிபதி நிலையத்தில் தங்கியிருக்கின்றனர்.

*　*

மதுரை வைகையாற்றின் வடகரையில் ஒரு பெண் விறகு பொறுக்கிக் கொண்டிருக்கையில் ஒரு திருடன் வந்து அவளைக் காயப்படுத்தி அவளிடம் உள்ள சுமார் 150 ரூ பெறுமான நகைகளை அபகரித்துக் கொண்டோடி விட்டான்.

*　*

மதுரை ஜில்லா போர்டு காரியாலயத்தில் உத்தியோகம் பார்த்துவந்த 24—வயதுள்ள ஓர் பிராமண வாலிபர் தனக்கு பல தடவையாக சாந்தி முகூர்த்தம் நடைபெறாமல் தன் தகப்பனால் தடைபட்டுப்போன காரணத்தால் தன் தகப்பன் மீது வருத்தங் கொண்டு மாரியம்மன் தெப்பக்குளத்தில் விழுந்து மாண்டுபோனார்.

*　*

அமெரிக்க யாத்ரீகர்கள் சுமார் 450 பேர் நியுயார்க்கினின்றும் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர். இவர்களில் 160 பேர் கல்கத்தாவில் தங்கிவிட்டார்கள். மற்றவர்கள் கொளும்பு மார்க்கமாய் பம்பாய் வந்திருக்கின்றார்கள்.

*　*

ஜினிவாவிலிருக்கும் சர்வதேச மகாநாட்டுப் பிரதிநிதியும், சர்வதேசத் தொழிலாளர் பிராஞ்சு உத்தியோக சாலை டைரக்டருமான ஸ்ரீ ஷிலேமரை யாரோ ஒருவர் சுட்டு பலத்தகாயமுண்டாக்கிவிட்டார். சுட்டவர் இன்னாரென்று தெரியவில்லை.

*　*

லாகூரில் தேசீய வாரம் நடந்து வருகிறது. இதில் அந்நிய நாட்டுத் துணிகள் கொளுத்தப்பட்டன.

*　*

# 12-வது மகாநாடு,

## அருப்புக்கோட்டை.

மதுரை நாடார்
ஊழியப்பிரசுரசபை அறிக்கை.

நமது 12-வது மகாநாட்டை நாளது விபவ௵ ஆனி௴ கடைசிவாரத்தில் அருப்புக்கோட்டையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. ஸ்ரீமான்கள் ப. உ. ஆ. சிதம்பரநாடார், ச. வள்ளிநாயக நாடார், ரு. ஆ. முத்துநாடார் இன்னும் பல தலைவர்களும் வாலிபர்களும் இவ்விஷயமாய் விசேஷ முயற்சி யெடுத்து ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்து வருகிறார்கள். இம்மகாநாட்டில் புதிதாக ஆசார சீர்திருத்த மகாநாடு, நாடார் சங்கீத மகாநாடு, நாடார் கைத்தொழில், பொருள் கண்காக்ஷி, நாடார் வாலிபர் மகாநாடு இன்னும் முக்கிய கூட்டங்களும் காக்ஷிகளும் நடத்த தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. ஆகவே இக்கான்பரன்ஸானது முன் கான்பரன்ஸ்களைக் காட்டிலும் சிறப்புடையதாகவும் விசேஷ நன்மை தரக்கூடியதாகவும் நம்ஜன சமூகத்திற்குப் புதியஉணர்ச்சியை உண்டாக்கக்கூடியதாகவு மிருப்பதால் நாடார் மஹாஜனங்கள் அனைவரும் கான்பரன்ஸ் நடைபெறும் நாட்களை எதிர்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

காரியதரிசிகள்.

ஃ　ஃ　ஃ

14-4-28ல் கூடிய அருப்புக்கோட்டை கனம் உரைவின்முறையார் கூட்டத்தில் நாடார் 12-வது மகாநாட்டை அருப்புக்கோட்டையில் விமரிசையாய் நடத்திவைக்கவும் அதற்கான தளவாடங்கள் கொடுத்துதவவும் தீர்மானமாகியிருப்பதுடன் 15—4-28ல் கூடும் பொதுக்கூட்டத்தில் உபசரணைக் கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

---

கல்கத்தாவில் எல்லா வார்டுகளிலுமுள்ள குப்பை வாரிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். 3000 பேர் வேலையின்றித் தவிக்கின்றனர். நகரம் நாற்றமெடுத்துவிட்டது. தொத்து வியாதிபற்றி பயமேற்படுகிறது. வேலை நிறுத்தம் குறித்து முனிஸிபல் கூட்டம் கூடி யோசித்தது. சமாதானம் இன்னுமேற்படவில்லை.

*　*

பம்பாயில் சுமார் 200 அங்கத்தினர்கள் சேர்ந்து "ஆகாய விமானக்கிளப்" என்று ஒன்றேற்படுத்தி ஆகாயவிமானப் போக்கு வரத்தை ஸ்தாபிக்க தீவிர ஏற்பாடு செய்துவருகிறார்கள். இன்னும் 2 வாரத்தில் தயாராகிவிடும். பம்பாய் சர்க்காரும் உதவி செய்வதாகத் தெரிகிறது.

*　*

துருக்கியில் மதத்தை அரசாங்கத்திலிருந்து பிரத்தியேகப் படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா நாஷனல் அஸெம்பிளியில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

*　*

சேத் ஜெமன்லால் பஜாஜியின் தலைமையின் கீழ் கதர் பிரசாரம் செய்து வரும் கூட்டத்தார் கல்கத்தாவில் இரண்டு நாட்களில் அகில இந்தியா தேசபந்து ஞாபகச்சின்ன நிதிக்கு ரூ 15233-8-0 வசூலித்துள்ளார்கள்.

*　*

புதுக்கோட்டையில் ஆரோக்கியசாமி எனும் டிரைவர் நடேசன் என்பவன் மீது அவர்களுக்குள்ள பகைமை காரணமாக பெட்ரோலை ஊற்றி கொளுத்திவிட வேண்டுமென்று முயன்றதாக ஏற்பட்ட வழக்கில் ஸெஷன்ஸ் ஜட்ஜ் ஆரோக்கியசாமிக்கு 4 வருடக் கடுங்காவல் தண்டனையும், 100 ரூ அபராதமும் விதித்தார்.

*　*

பிரிட்டிஷ் நிலக்கரி சுரங்கங்களில் அனேகம் மூடிவிடப்போகும் காரணத்தால் அவற்றில் வேலை செய்து வந்த ஸ்திரீகளையும் பிள்ளைகளையும்காப்பாற்றுவதற்குத் தர்மசீலர்கள் சிலர் திரட்டி வரும் நிதிக்கு நமது மன்னர் பிரான் 500 பொன்களும், மேரிராணியார் 250 பொன்களும் உதவியிருக்கிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## புதிய சட்ட மெம்பர்

### ஜீவிய வரலாறு.

மன்னர் பிரானல் தங்கீகரிக்கப்பட்டு சென்னை அரசாங்கச் சட்ட மெம்பராய் நியமனம் பெற்றுள்ள திவான்பகதூர் ஸ்ரீமான் எம். கிருஷ்ணன் நாயர், எம். எல். ஸி. அவர்கள் பாலக்காட்டில் ஆலத்தூரில் கல்விகற்றூர்கள், பின்னர் கள்ளிக்கோட்டை அரசாங்கக் கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்றுப் பயின்ருர். அப்பால் ஸ்பெஷல் உபகாரச் சம்பளம் பெற்று சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயின்ருர். இவர் 1889ல் முதல் தரமாகத் தேர்ந்து பி. ஏ. பட்டம் பெற்ருர். அப்பால் சட்டக் கல்லூரியில் பயின்று 1893-ல் பி. எல். பரீட்சையில் தேறினுர். 1894-ம் ஆண்டில் ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவு செய்யப்பட்டார். கள்ளிக்கோட்டையில் 16 ஆண்டுகள் வக்கீல் தொழில்புரிந்து வந்தார். ஒன்பது ஆண்டுகள் கள்ளிக்கோட்டை முனிசிபல் கவுன்சில் அங்கத்தினராகவும் மூன்ருண்டுகள் அதன் தலைவராகவும் இருந்துள்ளார். நான்காண்டுகள் சாமோரின் கல்லூரி காரியதரிசியாகவும், பொக்கிஷதாரராகவும் இருந்தார். ஜில்லா விவசாய ஆலோசனைச் சபை மெம்பராகவும், கள்ளிக்கோட்டை விவசாயச் சங்கத்தலைவராகவும், ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்துள்ளார். கள்ளிக்கோட்டை காஸ்மா பாலிட்டன் கிளப்பைக் கண்டவர்களில் இவரும் ஒருவராவர். 1910 முதல் 1914 வரை திருவாங்கூர் ஹைகோர்ட் பிரதம நீதிபதியாய் இருந்தார். 1914 முதல் 1920 வரை திவானக இருந்தார்.

இவர் உயர்பதவி வகித்தகாலம் மகா யுத்தம் ஏற்பட்டமையினல் பெருஞ் சோதனை காலமாகவிருந்தது. அப்படியிருந்தும் அக்காலத்தில் உணவு சம்பந்தமாயும் உணவுப் பொருள்கள் விலை சம்பந்தமாயும் குடிகட்கு அதிகச் சங்கடங்களேற்பட்டும் அக்குடிகட்கு இவர் அதிகக்கஷ்டங்கள் எதுவும் தோன்ருதபடி திருவாங்கூர் ராஜ்ய பரிபாலனத்தை நடத்தினுர். இவர் கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவர். அதற்கு இவர் திருவாங்கூர் ராஜ்யத்தில் கல்வியைப் பரப்பத் திட்டம் போட்டதும் திருவாங்கூர் பல்கலைக்கழகக் கமிட்டி நியமித்ததுமே போதியசான்ருகும். இவர் சமஸ்தான ரெவினியூ டிபார்ட்மெண்டில் இந்துக்கள் அல்லாதாரையும் தாழ்ந்த வகுப்பு இந்துக்களையும் வேலையில் அமர்த்திக் கொள்ள வேண்டுமெனப் பெரிதும் விரும்பினுர். அதற்காக இவர் சமஸ்தானத்தையும் ரெவினியூ இலாகாவையும் பிரிப்பதை ஆராய்வதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தினுர். இச்சீர் திருத்தம் பின்னுல் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர் தாம் திவானய் இருக்கும்போதே சமஸ்தானத்தில் நிலச்சுவான்தார்களுக்கும் குடியானவர்கட்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி விசாரிக்க ஆரம்பம் செய்துள்ளார்.

இவர் முதலில் 1903ம் ஆண்டில் சென்னைச் சட்டசபை அங்கத்தினரானுர். 1910-வரை சட்டசபை அங்கத்தினராய் இருந்தார். அப்பால் திருவாங்கூர் பிரதமநீதிபதியானுர். தனது திருவாங்கூர் திவான் உத்தியோக காலம் கழிந்ததும் மீண்டும் மாண்ட்போர்டு சீர்திருத்தப்படி ஏற்பட்ட முதல் சட்டசபையில் அங்கத்தினரானுர். அதுமுதல் சட்டசபை அங்கத்தினராகவே இருந்து வருகின்ருர். இவரேதான் சட்டசபை அங்கத்தினர்களிலெல்லாம் ஸீனியர் என்று நாம் கருதுகின்ருேம். இவர் சுமார் 25 ஆண்டுகட்கு மேல் சட்டசபையில் நெருங்கிய சம்பந்தமுடையவர். இவர் தாழ்ந்த வகுப்பினர்கட்கு நியாயம் வழங்கவேண்டு மென்பதில் எப்பொழுதும் முன்னணியில் நிற்பவர். குடியானவர்கள் கஷ்ட நிவர்த்திக்குச் சட்டமியற்ற வேண்டுமென்பதில் இவருக்குள்ள ஆர்வத்தை இவர் சென்னைச் சட்டசபையிலும் திருவாங்கூரிலும் செய்துள்ள வேலைகளினுலே தெரிந்துகொள்ளலாம். இவர் சென்னைச் சட்டசபையில் சிறிது காலத்திற்கு முன்புதான் மலையாளக் குடிவார மசோதாவை நிறைவேற்றிவைத்தார். அம்மசோதாவைக் கவர்னர் கிராகரித்துவிட்டார். இப்பொழுது இவர் சட்டமெம்பராய் நியமிக்கப்பட்டு விட்டமையால் இனி ஒரு கூட்டத்தார் சார்பாகப்பரிந்து பேசமுடியாது போனுலும், இவர் பாரபட்ச மற்ற மனப்பான்மையை உடைத்தாய் இருக்க வேண்டியவராயிருந்தபோதிலும், குடியானவர்கள் விஷயத்தில் இவருக்குள்ள ஊக்கம் குறைந்துபோகவில்லை. இவர் குடியானவர்கள் நலத்தையும் நிலச்சுவான்தார்கள் நலத்தையும் பாதுகாக்கத் தன்னுல் இயன்றவற்றை எல்லாம் செய்வாரெனக் கருதப்படுகின்றது.

இவர் மக்கள் சமுதாயத்திலும் செல்வநிலையிலும் அமைதியாகவும் முறையாகவும் முன்னேறவேண்டுமென்னும் கொள்கையை உடையவர். இவர் அமிதவாதியல்ல. இவர் எப்பொழுதும் எந்தமாதிரியும் ஒத்துழையாமை செய்வதை எதிர்ப்பவர்.

திரு. கிருஷ்ணன் நாயர் ஒரு பண்டைக்காலப் பரம்பரைக் குடும்பத்தில் உதித்தவர். பிறப்பினுலும் பரம்பரைக் குணத்தினுலும் இவர் ராஜ்யத்திற்கும் மக்கட்கும் திருப்தியைக் கொண்டுவரும் எல்லா முறைகளையும் ஆதரிப்பவர். இவரின் முன்னேர்கள் பாலக்காட்டு அரசர்களிடம் பெரும் இராணுவப் பதவிகள் வகித்திருந்தனர். இவ்வரசர்கள் மலையாள ஜில்லாவில் பெரும்பாகத்தை ஆண்டனர். இவர் தர்வாடு பரம்பரையைச் சார்ந்தவர். அந்தப்பரம்பரையில் மூத்த ஆண்பிள்ளைக்கு மன்னத் ஆச்சான் என்றும், மூத்தபெண்ணுக்கு மன்னத் அம்மா என்றும் பெயர். இவை கௌரவம் வாய்ந்த பட்டப்பெயராகும். இவை அக்குடும்பத்தின் உயரிய நிலையைக் குறிக்கின்றன.

இவர் 1915-ம் ஆண்டில் புதிய ஆண்டுப் பட்ட மளிப்பு விழாவில் திவான்பகதூர் பட்டம் பெற்ருர். யுத்தக்கடன் வசூலுக்கு தான் செய்த வேலைக்கு கௌரவ நற்சாட்சிப்பத்திரமும் பெற்றுள்ளார். சேனுதிபதியும் தனது கடிதப்போக்கு வரத்துகளில் இவரைப்பற்றி பெருமையாய்க் கூறியுள்ளார். இவர் திருவாங்கூர் திவான்பதவியிலிருந்து விலகு முன் மகாராஜா இவருக்கு ஒரு ஜோடி தங்க வீரச் சங்கிலிகள் வெகுமதி யளித்தார். இது சாதாரணமாய் கொடுக்கப்படுவது அன்று. இதற்கு முன்பு ஒரே ஒரு திவானுக்குத்தான் அவருடைய அரிய தொண்டிற்காக இம்மாதிரியான கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நேர்மையும், நியாயமும் அடக்கமும் அநுதாப முடையவரை சட்டமெம்பராக அடைந்துள்ளது. இவருடைய பாரபட்ச மற்ற தன்மைக்கு திருவாங்கூர் நிர்வாகமே போதிய சான்ருகும். இவர் இப்பதவிக்குத் தாம் தகுதியுடையவர் என்பதை மெய்ப்பித்துக்காட்டுவார் என்பதில் சந்தேகமில்லை. இவர் சிறந்த அநுபோக முதிர்ச்சியுடைய நிர்வாகியாவர்.

---

## நாடார் பெருமக்கள்

### கவனிக்க வேண்டும்.

பாண்டிய நாட்டில் நமக்கு சமத்துவம் கொடுக்க மறுக்கும் சில ஆலயங்களில் சமத்துவத்துக்கு நாம் வாதாட உரிமை இருப்பதுபோல் நமது சொந்த ஆலயங்களில் ஆதிதிராவிட சகோதரர்கள் போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு சமத்துவம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிருேம். ஆகையால் நமது உரிமையைப் பெறுவதற்கு முன் நமது கடமையைச் செய்வதுதான் மேலான நோக்கமாகும்.

நாம் சிலரை உயர்ந்தோர்களென்றும் சிலரைத்தாழ்ந்தோர்களென்றும்கொண்டிருக்கிற எண்ணம் நீங்க வழிதேட வேண்டும். இப்படி நினைப்பு இருப்பதாலல்லவா ஆதிதிராவிட சகோதரர்களைத் தாழ்வாகவும் ஜாதி இந்துக்கள் என்ற பிராமணர் பிராமணரல்லாதாரை உயர்வாகவும் எண்ணி, தாழ்வானவர்களை நம்மைப்போல் மதித்தால் உயர்வானவர்கள் நம்மைமதிக்க மாட்டார்களென்று கொணடிருக்கும் தப்பு அபிப்பிராயம் நீங்கவேண்டும்.

இப்படிப்பட்ட தப்பெண்ணம் நம் ஜனங்களின் மனதிடையே, இருப்பது நீங்கத்தகுந்த ஒரு தீர்மானம் இவ்வருஷம் நடக்கும் நமது 12-வது கான்பரன்ஸுக்கு வரவேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திக்கிறேன் என்று ஸ்ரீமான் மீ. சி. சுந்தரநாடார் எழுதுகிருர்.

---

## போடிநாயக்கனூர்

### முனிஸிபல் சேர்மன் ராஜிநாமாவும், தெரிந்தெடுப்பும்.

இவ்வூரில் 31—3—28-ல் முனிஸிபல் கௌன்ஸில் மீட்டிங்கு கூடியதில் இவ்வூர் முனிஸிபல் சேர்மனுக இருந்த மகா-ள-ள-ஸ்ரீ ராவ்சாகிப் அ. சு. அழகணன் செட்டியாரவர்கள் தமக்கு சில அசௌகரியமிருப்பதாகச் சொல்லி தம்முடைய சேர்மன் பதவியை ராஜிநாமா எழுதிக் கொடுத்துவிட்டார்கள். மறுநாள் 1—4—28-ல் ஸ்பெஷல் மீட்டிங்கு கூட்டி 15 கவுன்ஸிலர்கள் வரை ஆஜராகி இவ்வூரில் மகா கௌரவம் வாய்ந்த ஜமீன்தார் மகா-ள-ள ஸ்ரீ டி. வி. கே. காமராஜபாண்டிய நாயக்கரவர்கள் போட்டியன்னியில் ஏக மனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

சேர்மன் பதவியை ஒப்புக்கொண்ட நாயக்கர் அவர்கள், கனவான்களே! முனிஸிபல் சபையில் சேர்மனுக இருந்து அனுபவம் பெருத என்னைத் தெரிந்தெடுத்ததற்காக உங்களுக்கு வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன் இருந்த சேர்மனவர்களிடம் நீங்கள் எவ்வளவு ஆதரவோடு ஒற்றுமையாய் இருந்தீர்களோ அதுபோலவே என்னிடமும் இருக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன் என்று பேசிமுடித்தார்கள். பொதுவாக ஜமீன்தாராக உள்ளவர்கள் சாதாரண ஜனங்களின் சௌகரியத்தைப் பாதுகாக்க எண்ணம் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட ஸ்தலஸ்தாபனங்களில் தலைமை வகித்தால்த்தான் சகல ஜனங்களின் வார்த்தைக்கும் செவி கொடுத்து உண்மையறிந்து பாதுகாக்கத் தோதாயிருக்கும் என்று நன்கு அறிந்து சேர்மன் பதவியைஒப்புக்கொண்ட கனம். ஜமீன்தாரவர்களைப் பொதுஜனங்கள்பாராட்டுகிருர்கள்.

மேலும், மனிதர்கள் பிறப்பில்உயர்வு தாழ்வு இல்லை என்றும், ஜீவர்கள் எல்தாம் ஒரே பொருளிலிருந்து பலவாய் எங்கும் உருவங்காட்டி நிற்கிருர்களென்றும் நன்கு தெரிந்துகொண்டவர் என்றும் கேள்விப்படுகிருேம்.

ஆகையால், இனிமேல்கூடும் முனிஸிபல் மீட்டிங்கில்கவுன்ஸிலர்களிலொருவரான ஸ்ரீமான் ஜான் டேவிட் என்பவரைத் தாழ்த்தப்பட்டவரென்று அவமதிக்காமல் எல்லாருக்கும்போல் சரியான நாற்காலி ஆசனம் கொடுத்து நீதியை நிலைநாட்டுவார் என்று தாழ்த்தப்பட்டவர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

இதுவரை சேர்மனுக இருந்தவர் மேல்கண்ட ஜான் டேவிட் அவர்களுக்கு அநீதியாக 3 அங்குல உயர முள்ள பலகையை ஆசனமாகக் கொடுத்து வீற்றிருக்கும்படி செய்த கொடுமையை ஜனங்கள் கடவுளிடம் ஒப்புவித்துக்கொண்டுவந்தார்கள். மனிதருக்கு மனிதர் தாழ்வு என்று எந்த சாஸ்திரமும் எந்த சட்டமும் சொல்லவில்லையே என்று ஸ்ரீமான் மீ. சி. சுந்தர நாடார் எழுதுகிருர்.

---

## மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சங்கம், மதுரை.

### முதல் மகாநாடு

இந்தச் சங்கத்தின் சார்பாக நிகழும் 1928-ம் ஞூ எப்ரல் மீ 30வ. மே மீ 1, 2வ களாகிய இந்த மூன்று தினங்களிலும் மதுரையில் சேதுபதி ஹைஸ்கூலில் வர்த்தகர்களுடைய முதல் மகாநாடு நடைபெறும்.

இந்த மகாநாடு எல்லா வியாபாரிகளினுடைய பிரயோஜனத்திற்காகவும் கௌரவமாக வியாபாரம் நடந்து வரவேண்டியதற்காகவும் வியாபார. கனவான்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை அரசாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தி நன்மை பெறுவதற்காகவும் நடைபெறுகிறது. அநேக தேசங்களிலும் ஏற்பட்டிருக்கிறபடி நம் மதுரையிலும் இச்சங்கம் ஏற்பட்டு நடந்துவருகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

தற்காலம் இம் மகாநாடு நடைபெறுவதானது வியாபாரிகளினுடைய பெரும்பாக்கியமென்றே நினைக்க வேண்டும். இம்மகா நாட்டில் பேசித் தீர்மானமாகிற விஷயங்கள் சகலரும் அனுபவிக்கக்கூடிய சுதந்திரமாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் சங்கத்தாருக்கு ஊக்கம் கொடுத்து செம்மையாகவும் குதூகலமாகவும் நடந்தேறி வரவேண்டியதற்கு மிகவும் உதவியாகவும் பக்கபலமாகவும் இருப்பீர்களென்று சங்கத்தார் நம்புகிருர்கள்.

இப்போது பிரசுரித்திருக்கும் சர்க்குலரில் கண்டபடி எல்லா கனவான்களும் தங்களால் இயன்றமட்டும் பொருளுதவிசெய்து டிக்கட்டுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இம் மகாநாட்டிற்கு விஜயம் செய்து சிறப்புவிக்க வேணுமென்றும் கேட்டுக்கொள்கிருர்கள்.

சேக்ரட்டேரி,
யம். ஸி. ராமராஜ நாயுடு.

சங்கம் பிரசிடெண்டு,
க. பூ ராகவ நாடார்.

வைஸ் பிரசிடெண்டு,
கா. ரெங்கய்யஞ் செட்டியார்.

---

## இன்ப விருந்து.

ஜெமித்தாலும் பயங்காளிகளான கோழைகளை சஞ்சலம் வாத்தியம் கொண்டாடிக் கொண்டே யிருக்கிறது.

* * *

நம் ஸ்தானத்தில் பிறரிருப்பதைக் காட்டிலும் நாமே யிருப்பது சாலவும் நன்று.

* * *

மனித ஜீவியம் ஒரு புஷ்பம் போன்றது. பாலியப் பிராயத்தை மலரின் அரும்பிற்கும், வாலிபப் பருவத்தை மலர்ந்த மலருக்கும், கிழப்பருவத்தை வாடிய புஷ்பத்திற்கும் ஒப்பிடலாம்.

* * *

தங்கள் கடமைகளை நன்கறியாத அநேக குடும்பங்கள் கவலையில் நீந்தித் தத்தளிக்கின்றன.

* * *

மிகுந்த அறிவும், நிறைந்த சாமர்த்தியமும் உள்ளவர்களாயினும் ஒரு காரியம் செய்யும் போது அனுபவமுள்ள பெரியோர்களோடு கலந்தாலோசித்துப் புகுதலானது பாலைவனத்தில் நிழலோடு நீரூற்றுமிருப்பதற்கொக்கும்.

* * *

குடும் பிறர்கையில் சிக்கி யிருக்கும் போது நாம் தள்ளுவதால் நமக்கே தீமை. ஆனல் சகித்தல் நேசங் கொண்டு ஊக்கமாயேற்ற சமயத்தை எதிர்பார்க்கவேண்டும்.

* * *

தன் குற்றத்தைப் பார்ப்பதில் குருடராயிருப்பதோடு பிறர் குற்றம் காணுவதில் நான்கு கண்களுடையவர்களாயிருக்கிருேம். சிந்தித்துத் திருந்துதல் சிறப்பு.

* * *

பலரும் பலவகையில் பட்டுப் பட்டுத்தான் தேர்ச்சியடைகிருர்கள்.

* * *

இறைவன் மனிதனுடைய பேராசையைப் பார்த்து நகைத்தாலும் பொறுமையைப் பார்த்து வருந்தாமலிருக்க மாட்டார்.

* * *

நீ நெறியில் முதலில் ஜெயங் கிடைப்பது எலிக்கு எலிப்பொறியில் முதலில் மதுரமான ஆகாரம் கிடைப்பது போன்றது.

* * *

படித்தவர்களைக் காட்டிலும் படிக்காதவர்களிடமும் மிகுந்த யோசனையும் சாமர்த்தியமும் செழுமியிருக்கிறது. இது அனுபவ அறிவின் உதவியே.

* * *

கீழே தவறி விழுந்த கஷ்டத்தைக் கூடக் கவனியாமல் பிறர் யாரு மிதைக் கவனித்து விட்டார்களோ வென்றே கவனிக்கிருேம். முதல் கஷ்டத்தைக் காட்டிலும் இரண்டாவது அவமானமெனக் கருதப்படுவதே பெரிதாகக் கொள்ளப்படுகிறது.

அ. கு. அண்ணமலை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

## 5-வது அத்தியாயம்.

### நட்பின் நன்மை

ஆனந்த விலாஸ் மாளிகையில் பரமேஸ்வரனும் சிவநந்தனும் பேசிக்கொண்டிருந்தார்களென மூன்றாவதத்தியாயத்தில் கூறியது ஞாபகமிருக்கலாம்.

சிவநந்தன்:— நற்குண நண்பா! விஷயமிவ்வளவுதானே?

பரமேஸ்வரன்:—இல்லை. இன்னுமென் பிதாவின் கூற்றைக் கேள்.

மேற்கூறிய விஷயங்களுக்கெல்லாம் காரணம் பத்திரிகை படிப்பதாம். ஆனதாலினி பத்திரிகையும் இவை சம்பந்தமான தேசீய புத்தகங்கள் முதலியவைகளையும் படிக்கக்கூடாதாம். பிரசங்கங்கள் கேட்கக்கூடாதாம். பத்திரிகை படித்து புத்தியைக் கடன் கொடுத்துவிட்டேனென்கிறார். நேசா! யோசித்துப்பார். பத்திரிகை படியாத மனிதன் பாதி மனிதனன்றோ? பத்திரிகையில்லாத தேசம் பாழ். பத்திரிகையில்லாவிட்டால் கூப மண்டூகங்களாயிருக்க வேண்டியதுதானே? உலக சமாச்சாரம் தெரிவதெப்படி? தேசபக்தி, பாஷாபிமான முதிப்பதெப்படி? நாம் அடிமைத்தனத்திலிருந்து தப்பித்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தையடைந்து முன்னேறுவதெப்படி? கண்ணினும் சிறந்த அறிவை வளர்த்து சுகம் நல்கக்கூடியது பத்திரிகைரத்தினமன்றோ? பிரியா! என் பிதா வயலில் வரும் வரும்படியைத் தின்றுகொண்டு சந்தோஷமாய்க் காலங்கழிக்கலாமென்றும், சும்மாலிருப்பதே சுகமென்றும், ராமனாண்டாலென்ன? ராவணனாண்டாலென்ன? நாம் சுக செல்வ சந்தோஷமாயிருக்கவேண்டியதுதானே யென்றும் சோம்பேறிகளின் திண்ணை வேதாந்தம் பாடுகிறார்.

இதோடொன்றில்லாமல் பழைய பழக்கவழக்கங்கள் எதுவாயிருந்தாலும் அப்படியே அதன்வாலைப் பிடித்துக்கொண்டு நடக்கவேண்டுமாம். நண்பா! இதுதான் கண்மூடித்தனமென்பது. வழக்கம் வழக்கமென வம்புபேசுகிறார். வழக்கம் தீமையை நல்குவதாயிருந்தாலதை யொழித்துவிட்டு நன்மை கிடைக்கும் விதத்தைக் கையாளவேண்டியதன்றோ முறை?

அன்பா! பிதாவை இழிவாகக்கூறுவதாக நினைக்கக்கூடாது. எவராயினும் தப்பிதமான வழி யேகுவோரைத் திருத்தப் பிரயாசை யெடுத்துக்கொள்வதே கடமை. ஆடவன் தவறிய வழி நடந்தால் அதைத் திருத்துவது ஆடவள் கடமை. இது கணவனுக்கு மீறியதாகுமா? தன் கடமையைச் செய்ததே தலைமையானது. ஸ்ரீ ராமச்சந்திரர் காட்டிற்குப் போகும்போது சீதைகூட அவர் சொல்லுக்கு மீறவில்லையா! அது அவளுடைய கற்பிற்கு பங்கத்தையோ அல்லது குற்றமாகிய குறைவையோ அவள்மேல் சுமத்தவில்லை. ஏன்? அது அவளுடைய பரிசுத்தமான கடமை. ஆதலால் உலகத்திலொவ்வொரு மனிதனும் தன் தன் கடமையைச் செய்யத்தவறின் மடமையில் போய்விழுவான். நிற்க, நான் "நீங்கள் காலை, மாலை காபி, பலகாரம் முதலியவைகள் உட்கொள்வதும், சொக்காய் முதலியவைகள் அணிந்துகொள்வதும், மோட்டார் முதலிய வண்டிகளிலேறி சவாரிசெய்வதும் முன் காலத்தில் நம் பாட்டன் பூட்டனெல்லாம் செய்துவந்த காரியங்கள்தானோ? உங்களுக்குமாத்திரம் தனியாக விலக்குவிதியோ?" என்றேன். அதற்கவர் "நீ என்னை எதிர்த்து மீறிப் பேசும் காலமுமாச்சுதே" யென்று கூறிவிட்டுப் போனார்.

நானும் காரியார்த்தமாய் வெளியே போய்விட்டேன். கண்மூடித்தனமான வழக்கமொரு பாழுங்கிணறன்றோ? அக்கிணற்றில் கிடக்கும் விஷத்தண்ணீர் மூட நம்பிக்கைக்குச் சமமன்றோ? வைராக்கியம் நாய விஷயங்களிலன்றோ வேண்டும்? தீய விஷயங்களிலிருக்கும்வைராக்கியம் பிடிவாதமாகும்.

சிவநந்தா! பின் நான் மாலையில் வீடு புகுந்தேன். கல்வி மணக்குறைவுடைய என்னன்புறு அன்னை ஒரு கடிதத்தை "உன் தந்தை இக்கடிதத்தை உன்னிடம் கொடுக்க உத்தரவிட்டா" ரெனக் கொடுத்தாள். இதோவிருக்கும் அக்கடிதத்தை வாசிக்கிறேன்; கேள் என்று பரமேஸ்வரன்கூறி பின் வருமாறு வாசித்தான்:—

மங்களநல்லூர்.

சிரஞ்சீவி பரமேஸ்வரனுக்கும் சௌபாக்கியவதி மனைவி சரஸ்வதியம்மாளுக்கும் ஆசீர்வாதம். மனம்போல் கடவுள் கிருபை செய்வார். காலமோ தலைகீழாய் நிற்கிறது. தர்மம் குறைந்து அதர்மம் நிறைந்து நர்த்தனம் புரிகிறது. பிதாவின் சொல்லுக்கு மீறாது நடந்த ஸ்ரீராமன் காலமோ செல்லாகிவிட்டது. பிள்ளைகள் பிதாவின் சொற்படி நடவாது மீறி எதிர்த்துப் பேசும் காலமுமுதித்துவிட்டது. இறைவனால் ஆடவர்கட்கென்றே அடிமை யந்திரமாகப் படைக்கப்பட்டிருக்கும் ஆடவள்கள் எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்; நாங்கள் அன்பாய் நடப்போம்; அடிமையாய் நடக்கோமென்று சொல்லும் வார்த்தைகள் முழங்குகின்றன. சாதிமத தர்மங்களுக்கோ சாவுமணி அடித்துவிட்டது. கலியின் குணம் தெற்றெனத்தெரிகிறது. ஆகையால் என் மனம் இப்படிப்பட்ட நிலைமையிலிருக்கும் உலகத்தோடும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் பிள்ளை மனைவியாகிய உங்களோடும் இல்லறமினிது நடத்த இஷ்டமில்லை. தீர்த்தயாத்திரைக்காக காசிவரை செல்ல உத்தேசம். என்னையினித்தேடவேண்டாம். எல்லாமென் தலைவிதிபோல் நடக்கும். பூர்வ பாவ கர்மமே இப்படி வந்து சூழ்ந்திருக்கிறது.

இப்படிக்கு

சுந்தரானந்தாச்சாரி.

ப. அன்பா! கவனித்தனையா! என் தாய் வருந்தி கண்ணீர் விடுகிறாள். அதற்காகவே நான் பல பலவாறு எண்ணிக்கொண்டிருந்தேன்.

சிவநந்தன்:— பலவெண்ணிப் பயனென்ன? கவலையினாலாவதென்ன? பெண் புத்தி பேதமைதானே செய்யும். ஆனாலுமென் செய்வது? நிதானமாக சமாதானம் செய்து துக்கத்தை மாற்ற தேசிய விஷயங்களையும் அழகிய ஒழுக்கக்கதைகளையும் கூறி மகிழ்விக்கவேண்டியதே உனது கடமை. உங்கள் பிதா வேத சாஸ்திரங்கள் உருப்போட்டிருந்தும், அநுபவம் வயது முதிர்ச்சியாயிருந்தும் உலக ஞான மின்மையாலிவ்வளவு சங்கடங்களும் நேர்ந்திருக்கின்றன. போனதைப் பேசிப் பயனென்ன? இனி நடக்கவேண்டியதைக் கவனித்தலே சிறப்பு. தீர்த்தயாத்திரை சென்ற பிதா சிறிது நாட்களில் உலகஞானமடைந்து திரும்பி வருவாரென்றே நம்புகிறேன். முதலில் அவரைக்கண்டு பிடிப்பதே கஷ்டம். கண்டு பிடித்தாலும் வீடு திரும்பார். இதனால் துக்கம் வளருமே தவிர குறையாது. உண்மைக்கென்றுமழிவில்லை யென்றான். இதைக் கேட்ட பரமேஸ்வரன் மனம் அதைரிய சேற்றிலிருந்து வெளியேறி தைரியமென்னும் தென்றலினுலாவியது. சிறிதுநேரமும் சென்றது. சிவநந்தன் விடைபெற்று வீடு சென்றான். நிற்க,

முதலத்தியாயத்திலிருந்தே கூறப்பட்டுவரும் வைதீகர் நமது பரமேஸ்வரனின் பிதாவான சுந்தரானந்தாச்சாரியாரே.

தொடரும்.

---

# பானங்கள்.

மணற்பாறை ஸ்ரீமான் எம். கே. இராமச்சந்திர அய்யர் "சுதேசமித்திர"னில் எழுதியது:—

தென் இந்தியா காபி, தேயிலைப் பானங்கள் நாற்பது வருஷங்களுக்கு முன் கிடையாது. பெயரும் கேட்டறியோம். ௧௮௮0-ம் வருஷத்திற்குப்பிறகு அபூர்வமாய்ச் சில தனவந்தர்களும் உயர்தர உத்தியோகஸ்தர்களும் பானஞ் செய்யத் தங்கள் வீட்டில் உட்புகுத்தினார்கள். அவர்கள் வீட்டிலுள்ள ஸ்திரீகளும் குழந்தைகளும் இப்பானத்தை உபயோகப்படுத்த ஆரம்பத்தில் துணிந்தில்லை. சில வருஷங்களுக்குள் பல வீடுகளிலும் உபயோகப்படுத்தவும் சிறு குழந்தைகளும் தவறாமல் உட்கொள்ள வேண்டி பழக்கமும் ஆரம்பித்திருக்கிறதைப் பார்க்கக் கவலை கொள்ளாமலிருக்க முடியவில்லை. காபி, தேயிலைப் பானங்கள் உபயோகிக்கப்படாத காலத்தில் சிறுவர்களும் யுவர்களும் காலையில் பழைய சாதம் சாப்பிட்டுத் திடசரீரிகளாகவும், லக்ஷணமுள்ளவர்களாகவும் வியாதியில்லாதவர்களாகவும், நற்குணங்களுடன் கூடினவர்களாகவுமிருந்திருக்கிறார்கள். அப்பேர்க்கொத்தவர்கள் இப்போது வயது முதிர்ந்திருந்தும் திடத்துடன் இருப்பதைக் காண்கின்றோம். காபி, தேயிலைப்பானம் செய்பவர்களின் திடக்குறையையும், இதர கஷ்டங்களையும், வியாதிக் குள்ளாவதையும் பிரத்தியக்ஷமாகப்பார்க்கிறோம். இப்பானத்தினால் ஏற்படும் செலவைப் பற்றியும் மனதிற்குப் பிடிக்காத செய்கைகளைப்பற்றியும் பலரும் அறிந்தும் வெறுக்கவும் நீக்கவும் முடியாத நிலைமையிலிருப்பது பரிதபிக்கத்தக்கது. காபி, தேயிலைப் பானங்கள் ஆகாரமாக உபயோகப்படுவதைக் காட்டிலும் தமாஷிற்கும், டம்பத்திற்கும், பெருமைக்கும் உற்சாகத்திற்குமாகப்பெரும்பாலும் உபயோகப் படுத்தப்படுவதாகக் காணப்படுகிறது. மேல்நாடுகளில் குளிர் அதிகமாகையால் காபி, தேயிலையை உபயோகிக்கிறார்கள். நேர் மாறுபாடுடையதும் உஷ்ணமதிகமாக இருக்கிறதுமாகிய இந்தியாவில் அம்மாதிரி பானம் கெடுதல்களைத்தான் உண்டுபண்ணுவதாயிருக்கிறது. நமது சௌக்கியத்திற்கு விரோதமான விஷயங்களிலும் பிறரைப்பார்த்து நடிப்பது மிகக்கேவலமாகும். காபி, தேயிலைப்பானங்களைக் கள்ளு, சாராயம், கஞ்சா, அபினி முதலிய இனத்தைச் சேர்ந்ததென்றே சொல்லலாம்.

காபி, தேயிலைப்பானங்களால் நீர் ரோகம், நரம்புத்தளர்ச்சி, இந்திரியம் நீர்த்துப்போதல், மூளை கெடுதல், புத்திரசந்தான மில்லாமை, விரத நியமனங்களில் கெடுதல், ஆகார நியமனங்களில் கெடுதல், ஆகார நியமனங்களில் மாறுதல், அநாகரீகச் செயல்கள், அனாச்சாரங்கள், வியாதிகள் பிடித்தல் முதலியவைகள் உண்டாகின்றன. இப்பானங்களினால் ஏற்படும் கெடுதல்களைப்பற்றியும் வியாதிகளுக்கு ஆளாவதைப்பற்றியும் எழுதப்புகின் பெருகும். இரைப்பையைக் கெடுத்து ஜீர்ணத்தை மந்தப்படுத்துகிறது. கொதிப்பை உண்டாக்கி இரைப்பையில் வாய்வு அதிகரிக்கும்படி செய்து ஜீர்ணக் கருவிகளை பலஹீனமடையச் செய்கின்றது.

காபி, தேயிலையில் விஷப்பொருள்களும் இருக்கிறதாகவும், இரத்தாசய ஓட்டத்தை நேரே தாக்குகிறதாகவும், வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். மனிதனுடைய அங்கத்தையும் நரம்புக் கூட்டங்களையும் கெடுக்கும் விஷப்பொருள்கள் தேயிலையில் அடங்கிக் கிடக்கும் தேயின் என்னும் வஸ்துவில் இருக்கிறதாம். இவ்விஷயம் இங்கிலாந்து தேசத்தில் டாக்டர். எட்வர்டு ஸ்மித் என்பவர் காபிக்குடியும் தேயிலைக்குடியும் சரீரத்தின் நுட்பமான அவயவங்களாகிய இயந்திரங்களை நெருங்கி அடைத்து விடுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்.

மலச்சிக்கல், இரத்தாசயம் சரியாய் வேலை செய்யாமை, தூக்கமின்மை ஆகிய இவைகள் தேத்தண்ணீர் குடிப்பதால் விளையும் தீமைகளுக்கு முக்கிய அறிகுறி என்பதாக டாக்டர். ஜான் ஹார்வி கெல்லாக் எழுதியிருக்கிறார். சிந்தனைகளை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு [illegible]மையும் புத்திமாறாட்டத்தையும் கொடுத்து இரத்தத்தாரைகளை அதிகமாக இறுக்கி இருதயத்தையும், இரத்தத்தாரையையும் சேர்த்துபோகச் செய்கிறதாக மெட்டீரியா மெடிக்காஎன்னும் வைத்திய நூலைச் செய்த பாட்டர் என்னும் பெயரையுடைய புகழ்பெற்ற பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

வயிற்றுக்கும் நரம்புகளுக்கும் கெடுதல் செய்யும் மரஉப்புகள் காபியிலும் தேத்தண்ணீரிலும் இருக்கிறதாக உலகப்பிரசித்தமான தேகவலிமையுடையவரும் தேகாப்பியாசத்தில் தேர்ந்தவருமாகிய யூஜன் ஸாண்டோ என்பவர் சொல்லியிருக்கிறார். காபி, தேயிலை சதா உபயோகிப்பவர்களுக்கு நரம்பு சம்பந்தமான வலிகள், வாதரோகங்கள் முதலிய கொடிய ரோகங்கள் விளைவதாக ஹெய்க் முதலிய பெரிய வைத்திய நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

தேத்தண்ணீர் பானம் தூக்கமின்மை, மனோவியாகூலம், நினைவுதடுமாறல், நரம்பாதீனங்கள், அளவுக்கதிகமாக அசைந்தாடுதல், புத்திமாறாட்டம், நெஞ்சு துடி துடிப்பு, தேகம் நடுங்குதல் முதலிய வியாதிகளை உற்பத்தி செய்கின்றன என்பதாக புரொபஸர் டப்ளியூ. ஜீ. தாம்ஸன் எம். டி. என்ற அமெரிக்க ஆசிரியர்சொல்லியிருக்கிறார்.

மகாத்மா காந்தியடிகளும் நாசம் விளைவிக்கும் வஸ்துவாகிய தேத்தண்ணீர் ஏற்கெனவே கோடிக்கணக்கான ஸ்திரீ புருஷர்களின் ஜீர்ணத்திற்காதாரமான அவயவங்களைப் பாழாக்கினதுமன்றி அவர்களுக்குண்டான சொற்ப பணத்திற்கும் செலவை அதிகரிக்கும் மற்றொரு பாகமான சுமையாகவும் நேர்ந்துவிட்டது என்று கவலையுடன் சொல்லியிருக்கிறார். பொதுவாகக்காபி, தேயிலைப் பானங்களை உபயோகிப்பதினால் மனிதனுக்கு உண்டாகும் பல கொடிய கெடுதல்களில் மூளைக்கும் நரம்புகளுக்கும் ஏற்படும் கெடுதிகளே அதிகமாயிருக்கிறதாக அனுபவத்தினால் தெரிகிறது.

இவ்வளவு கொடியதாகத் தெரிகிற காபி, தேயிலைப்பானங்களை புருஷர்களால் நிறுத்தக் கூடாமலிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் இப்பழக்கம் அதிகரிக்கப்பட்டிருப்பதேயாகும். ஸ்திரீகள் சொற்ப கஷ்டத்துடனாயினும் சிரமப்பட்டு இத்துர்ப் பழக்கத்தை விலக்க முன்வருவார்களாகில் பெரிய அனுகூலத்தைச் செய்தவராவார்கள். காபி, தேயிலைப்பானங்களுக்குப் பதிலாக ஒரு படி கொத்தமல்லி தூளும் கால் பலம் சுக்குத்தூளும் கலந்தும், ஆவரம்பூ, நன்னாரி வேர்களைக் கொண்டும் கஷாயங்கள் இறக்கிப் பசுவின் பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டு வருவது காபி, தேத்தண்ணீர்ப் பானங்களை மறப்பதற்கு அனுகூலமாயிருப்பதுடன், கெடுதல்களைப்போக்கி நன்மைகள் செய்யவும் சாதனமாயிருக்கும்; செலவும் சொற்பமேயாகிறது.

காபி, தேயிலைத் தோட்டக்காரர்களாகிய ஐரோப்பியர்களும் இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிச் செல்வதை ஒருவாறு தடுத்து நமது தேசத்தினர்களுக்கு உபகாரம் செய்தவர்களுமாவோம்.

---

# முத்துப் பதக்கம்.

ஒரு செயலால் விளையும் பலாபலனறியாது அச்செயலைச் செய்ய முற்படுவது பின் மனக்கலக்கத்தை யுண்டுபண்ணுகிறது.

* *

ஒருவன் தன்னிடம் மாறி பிறி தோரிடத்து அதிலும் அகால நேரத்தில் தனியே நிற்பானாகின் அவனைத் திருட்டுப் புத்தியுடையவன் எனச்சந்தேகித்து விடுவது சகஜம்.

* *

தன்மையறியா ஒருவனிடம் எவ்வளவு வாஞ்சையுடன் பழகியிருந்தாலும் சமயத்தில் அவன் பழகினவரைப் புறக்கணித்து விடுவான்.

* *

சமய சந்தர்ப்பமறியாமல் விளையாட்டு செய்வதெல்லாம் தனக்கு அனர்த்தத்தை யழைத்துக்கொள்வது தான்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection